REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஓகஸ்ட் 23 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 198 | Tuesday 23, August, 2022 | 12 பக்கங்கள் | 40/-




## நாட்டை மீட்டெடுக்க தமிழ் தலைவர்களும் இணைய வேண்டும்

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்க அழைப்பு**



இலங்கையை மீட்டெடுக்கத் தமிழ்த் தலைவர்களும் கைகோர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அநுராதபுரம் கோல்டன் மெங்கோ மண்டபத்தில் நடைபெற்ற அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்தி சபை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்க அனைவரும்

04

**22 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டம்:**

## 09 மனுக்கள் மீதான விசாரணை இன்று வரை ஒத்திவைத்தது நீதிமன்றம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

22வது அரசியலமைப்பு திருத்த சட்ட மூலத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை இன்று வரை ஒத்திப்போடப் பட்டுள்ளது.

நேற்றைய தினம் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய,

04

## காலிமுகத்திடலுக்கு நஷ்டம் ரூ. 49 இலட்சம்



**செயற்பாட்டாளர்களிடமிருந்து அறவிட சட்ட நடவடிக்கை!**

காலி முகத்திடலுக்கு அருகில் 'கோட்டா கோ கம' என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்ட போராட்டக் களத்தினால் சுமார் 49 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

காலி முகத்திடலுக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை

04

**மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் பாதிக்கப்படும்**

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம்



**மீனவர்கள், பெருந்தோட்டத்துறையினருக்கு நேரடி நிதி நிவாரணம்**

**மண்ணெண்ணெய் மூலமாக தொழில்துறையில் ஈடுபடும் துறையினருக்கு மானிய அடிப்படையில் வழங்கவும் அரசு நடவடிக்கை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமது வாழ்வாதாரத்திற்காக மண்ணெண்ணெயை நம்பியுள்ள, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், மீனவர்கள் மற்றும் பெருந்தோட்டத்துறை சார்ந்தவர்களுக்கு நேரடியாக நிதி நிவாரணத்தை வழங்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மின்சக்தி வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர டுவிட்டர் பதிவொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய் விலைத் திருத்தத்துக்கான அவசியம் பல ஆண்டுகளாக நிலவி வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், மானிய விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டமை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நஷ்டமடைவதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் (21) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலையை 340 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதேவேளை சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் எண்ணெய்

04

## இந்தியாவிடமிருந்து 21,000 மெ.தொன் உரம்

**மேலுமொரு தொகை இலங்கைக்கு**



இந்தியாவினால் மேலும் 21,000 மெட்ரிக் தொன் உரம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்களுக்கான இந்தியாவின் சிறப்பு உதவியின் கீழான இந்த உரத்தை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளித்தார்.

கடந்த மாதமும் இந்தியாவினால் 44,000 மெட்ரிக் தொன் உரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, இந்த ஆண்டில் இந்தியாவின் ஆதரவின் கீழ், இதுவரை

04

## வசந்த முதலிகே உட்பட மூவருக்கும் 90 நாள் தடுப்பு

**விசாரணை நடத்த ஜனாதிபதி அனுமதி**



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார். அனைத்து

04

**200 ஆண்டு பழமையான பித்தளை உபகரணங்கள்;**

## அலரி மாளிகையில் திருடியவர் பொலிஸாரால் கைதானார்

**அவரிடமிருந்து ஊடக அலுவலக பொருட்களும் மீட்பு**



ஜூலை 09 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக்குள் நுழைந்து அங்கிருந்த சொத்துக்களை அபகரித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

04

## பிரித்தானிய பெண்ணை வெளியேற்றுமாறு உத்தரவு

**குடிவரவு திணைக்களத்திற்கு ஜனாதிபதி பணிப்பு**



காலி முகத்திடலுக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்கள் மூலம் சர்ச்சையில் சிக்கிய பிரித்தானிய பெண்மணி கெய்லி பிரேசரை உடனடியாக இலங்கையிலிருந்து வெளியேற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மூத்த அதிகாரி

04

## அதிக கட்டணம் வசூலித்த தனியார் பஸ் நடத்துனர்கள்

**சுமார் 100 உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை**



நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலித்த நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக

04

## தமிழக சுற்றுலா அமைச்சரை சந்தித்த இலங்கைத் தூதுவர்

**இருதரப்பு மேம்பாடு குறித்து கலந்துரையாடினர்**



சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஆணையர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன் தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் எம்.ஏ.மதிவேந்தனை சந்தித்தார். தமிழ்நாடு மற்றும் இலங்கையில் உள்ள உள்ளூர் சமூகங்களிடையே, இலங்கை மற்றும் தமிழ்நாட்டின் சுற்றுலா மேம்பாடு குறித்து இதன்போது ஆராயப்பட்டது. கூடுதலாக, தமிழ்நாடு சுற்றுலா அமைச்சகத்தின்

04

## அரசுடன் இணைந்து செயற்பட எதிரணிக்கு மீண்டும் அழைப்பு

**சஜித்துடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டைப் பொருளாதாரத்தில் கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சிக்கு மீண்டும்

04

**உலகளாவிய ரீதியில் வேகமாக பரவி வரும்**

## BA 5 கொரோனா திரிபு வைரஸ் இலங்கையில் 04 மாவட்டங்களில்



**இனங்காணப்பட்டுள்ளதாக டாக்டர் சந்திம ஜீவந்தர தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உலக அளவில் மிக வேகமாக பரவும் பிஏ5 கொரோனா திரிபு வைரஸ் இலங்கையில் மேலும் நான்கு மாவட்டங்களில்

04

**கடலில் வீசப்பட்ட 4.5 மில். பெறுமதியான**

## போதைப்பொருட்களை கண்டுபிடித்த கடற்படை



**மன்னார் நெடுகுடா பகுதியில் அதிரடி**

03

**குழந்தைகள் உட்பட மேலும்**

## 08 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்....



08

## அம்பலாங்கொடையில் துப்பாக்கிச்சூடு!

**இருவர் பலி; இருவருக்கு காயம்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அம்பலாங்கொடை தெல்துவ பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன்

04

## காந்தி ஆச்சிரமத்தில் நூல் நூற்ற சனத்



இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள சுற்றுலா மேம்பாட்டு தூதுவரான முன்னாள் கிரிக்கட் வீரர் சனத் ஜெயசூரிய மகாத்மா காந்தி நூல் நூற்ற ராட்டையில் நூல்

04

## ரூபவாஹினி ஒளிபரப்பு நேரத்தில் இடையூறு

**சமிந்த கெலும்பிரிய கைதானார்**



தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து, அதன் ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டுக்கு உள்ளான இரண்டாவது நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

04

## முட்டைகளை பதுக்கி வைத்தால் ஆபத்து

**அரசுடமையாக்க நடவடிக்கை**



நிர்ணய விலைக்கு மேலதிகமாக முட்டை விற்பனை செய்தல் மற்றும் சட்டவிரோதமாக முட்டையை

04

## இம்ரானுக்கு எதிராக பயங்கரவாத குற்றச்சாட்டு

**எந்நேரமும் அவர் கைதாகலாம்**



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது அந்நாட்டு பொலிஸார் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

04




### மஸ்கெலியா - நல்லதண்ணி வீதி மூடல்

# மாற்றுப் பாதையும் ஆபத்தான நிலையில்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்



மஸ்கெலியா - நல்லதண்ணி பிரதான வீதி மூடப்பட்டுள்ளதால் பயணிகள், பாடசாலை மாணவர்கள் லக்சபான தோட்ட வாழமலை வழியாக தற்போது பயணம் செய்வதால் அவ்வீதியும் நேற்று பெய்த கன மழையால் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் கன மழை பெய்து வருவதால் மஸ்கெலியா நல்லதண்ணி பிரதான வீதியில் மோகினி எல்ல பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக மஸ்கெலியா நல்லதண்ணி வீதியில் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார், அரச பேருந்துகள் மோகினி எல்ல பகுதியில் நிறுத்தப்படுவதால் அந்த இடத்தில் இருந்து பயணிகள் இறங்கி செல்லும் வழி மிகவும் ஆபத்தானது என தெரிவிக்கப்படுகிறது.

அவ்வீதி கனத்த மழை காரணமாக சகதி நிறைந்த நிலையில் காணப்படுவதால் வாகனங்கள் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை என சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பாதையை பயன்படுத்தும் மக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாவதால் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

### நுவரெலியாவுக்கு படையெடுக்கும் சுற்றுலா பயணிகள்

# சுகாதார விதிமுறைகளை பின்பற்றாததால் கொவிட் அச்சத்தில் மக்கள்



நாட்டில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா தொற்றினை கண்டு கொள்ளாமல் வார இறுதி நாட்களில் ஏனைய தொடர் விடுமுறை நாட்களிலும் வெளிமாவட்டங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தருகின்றார்கள். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருவதனால் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து விடும் என்ற அச்சம் நுவரெலியா வாழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வருகைத்தரும் சுற்றுலா பயணிகள் அதிகமானோர் முகக்கவசம் அணியாமல், சமூக இடைவெளியை பின்பற்றாமல் சுகாதார வழிக்காட்டு முறைகளை அலட்சியப்படுத்தி நடமாடுவதை காணமுடிகிறது

சுற்றுலா பயணிகளின் வருகை காரணமாக லவர் சீலிப் நீர் வீழ்ச்சி, விக்டோரியா பூங்கா, கிரகறி வாவி சூழலியல் பூங்கா, உலக முடிவு, சீத்தாஎலிய கோவில் போன்ற பகுதிகளுக்குச் சென்று வருகின்றனர்

ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளில் அறைகள் நிரம்பி வழிவதாக சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்களும் தெரிவிக்கின்றன.

ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்ற போதிலும் நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்கள் கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்டி வருவதாகவும் வர்த்தக நடவடிக்கைகள் சூடு பிடிக்கவில்லை எனவும் தங்களது அத்தியாவசிய தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்து கொள்வதற்கு மாத்திரம் பொருட்கள் கொள்வனவில் ஈடுபடுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்

சுற்றுலா பயணிகள் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற தவறுவதனால் எதிர்காலத்தில் மீண்டும் ஒரு தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாகவும் எனவே சுற்றுலா பயணிகள் சுகாதார விதி முறைகளை பின்பற்றுமாறும் சுகாதார பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டி.சந்ரு




ரோட்டரி கொழும்பு மிட்சிட்டி மற்றும் ரோட்டரகட் பீஸ் சிட்டி ஹற்றன் கழகங்களின் அனுசரணையில் தலவாக்கலை தேசிய பாடசாலையில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வு ஒன்று நடைப்பெற்ற போது... (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# உடப்புஸ்ஸலாவை நகரில் பஸ் தரிப்பிடம் இல்லை

உடப்புஸ்ஸலாவை நகரில் பஸ் தரிப்பிடம் இதுவரை இல்லாமல் இருப்பது பாரிய பிரச்சினையாக காணப்படுகிறது.

உடப்புஸ்ஸலாவை பிரதான நகரில் இருந்து வெளிமடை பிரதேசத்திற்கும் இராகலை வழியூடாக நுவரெலியா பிரதேசத்திற்கும் மட்டுமல்லாது வலப்பனை ஊடாக கண்டிக்கும் செல்ல முடியும்.

இவ்வாறான நிலையில் உடப்புஸ்ஸலாவை நகரிலிருந்து தூர பிரதேசங்களுக்கு பயணிப்பதற்கு தனியார் மற்றும் அரச பஸ்கள் சேவையில் ஈடுப்படுகின்ற போதிலும், இந்த நகரில் பஸ் தரிப்பிடம் இல்லை என்பது பாரிய குறைப்பாடாக காணப்படுகின்றது. இதனால் மழைக் காலங்களிலும் வெயில் காலத்திலும் நகரின் கடைகளை நம்பி பஸ்ஸுக்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில், வலப்பனை பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டுவந்த போதிலும் பயன் கிட்டியதாக இல்லை.

எனவே வலப்பனை பிரதேச சபை உடனடியாக காலம் தாழ்த்தாது, பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைத்து கொடுக்க முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### வீட்டு வேலைக்கமர்த்தப்பட்டிருந்த சிறுமி நீச்சல் தடாகத்தில் மரணம்

# மஸ்கெலியா, மொக்கா கீழ்ப்பிரிவு மயானத்தில் நேற்று நல்லடக்கம்



மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா, மொக்கா கீழ்ப்பிரிவு தோட்டத்தில் வசிக்கும் சிறுமி, கம்பஹா மாவட்ட பிரபல அரசியல்வாதியின் உறவினர் வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். அச் சிறுமி நீச்சல் தடாகத்தில் விழுந்து (19) ஆம் திகதி மரணமடைந்துள்ளார். சிறுமியின் சடலம் நேற்று மஸ்கெலியா, மொக்கா தோட்டத்திலுள்ள பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மொக்கா கீழ்ப்பிரிவு தோட்டத்திலுள்ள 16 வயதான ரமணி ஆறு மாதங்களுக்கு முன்னர் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார். ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னாள் அமைச்சரின் உறவினர் ஒருவரின், கம்பஹாவில் உள்ள வீட்டிலேயே பணி புரிந்து வந்துள்ளார்.

சுமார் 6 மாதங்கள் வரை அங்கு வேலைசெய்து வந்த நிலையில் கடந்த 19 ஆம் திகதி நீச்சல் தடாகத்தில் விழுந்து மூச்சு திணறல் ஏற்பட்டதாலேயே மரணித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுமியின் தந்தை அவரை சிறுவயதிலேயே விட்டு சென்றுள்ளார். தாயும் மறுமணம் முடித்துள்ளார். இதனால் மாமாவின் அரவணைப்பிலேயே இவர் வளர்ந்து வந்தார் தெரிவிக்கப்படுகிறது.



# புளத்கொஹுபிட்டியில் சிறுமி துஷ்பிரயோகம்

புளத்கொஹுபிட்டிய புஸ்பனே கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கிராம்மொன்றில் 15 வயது சிறுமியை துஸ்பிரயோகத்துக்குள்ளாக்கிய குற்றச்சாட்டில், குறித்த சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (20) சந்தேநபர் கைது செய்யப்பட்டார் என புளத்கொஹுபிட்டியபொலிஸார்தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 56 வயதான 3 பிள்ளைகளின் தந்தை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவரது மனைவி வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் நிலையில், இந்த மாதம் 19ஆம் திகதி குறித்த சிறுமி இரவு நேரத்தில் தனது தந்தையால் தனக்கு நேரும் விடயங்கள் குறித்து வகுப்பு ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஆசிரியரால் அதிபருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

# வர்த்தமானி பிரசுரித்தும் மலையகத்தில் முட்டை விலையில் மாற்றமில்லை

ஹற்றன் விசேட நிருபர்

நுகவோர் விவகார அதிகார சபையால் முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்த போதும் மலையக பகுதியில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை, ஹற்றன்,தலவாக்கலை உள்ளிட்ட பகுதிகளில் 60 ரூபா முதல் 65 ரூபா வரை விற்பனை செய்து வருவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நாட்டில் பொது மக்கள் நலன் கருதி வெளியிடப்படும் எந்த ஒரு சட்டமும் அல்லது அறிவுறுத்தல்களும் எந்த வர்த்தகரும் பின்பற்றுவதில்லை எனவும் இதற்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளோ பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களோ நடவடிக்கை எடுப்பதில்லை என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களுக்கு விலை அதிகரிக்கும் பொது வர்த்தகர்கள் உடன் விலை அதிகரிப்பதாகவும் விலை குறையும் போது விலை குறைப்பு இடம்பெறுவதில்லை.

நாட்டு மக்கள் பொருளாதார வீழ்ச்சி காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் வர்த்தக சமூகம் இவ்வாறு பொது மக்களிடமிருந்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் நடந்து கொள்வது மிகவும் மோசமான நிலை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இராகலையில் மாணிக்கக்கல் தோண்டிய மூவர் கைது

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தின் தேயிலை மலையில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் தோண்டிய மூவரை இராகலை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இதில் 35,40,41 வயதுடைய நபர்கள் மாணிக்கக்கல் தோண்டிக்கொண்டிருந்த வேளையில் (21) மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இராகலை பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த நபர்களை கைது செய்ததுடன் மாணிக்கக்கல் அகழ்விற்கு பாவிக்கப்பட்ட உபகரணங்களையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள மூவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் இராகலை பொலிசார் சந்தேக நபர்களை விசாரணையின் பின் வலப்பனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆ.ரமேஸ்

# தமிழ்நாடு அரசின் தமிழ் மொழி வளர்ச்சி நிதியை நாமும் பயன்படுத்த முயற்சிக்கலாம்

### பேராதனைப் பல்கலை நூலகர் ஆர். மகேஸ்வரன்





மாவத்தகம தினகரன் நிருபர்

தமிழ்மொழி பண்பாடு, மீட்பு, காப்பு வளர்ச்சிக்காக இந்தியாவிலுள்ள தமிழ் மாநில அரசு பிறநாடுகளில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக 25 கோடி ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. அந்நிதியினை இலங்கைக்கும் கொண்டு வந்து தமிழ் மொழி வளர்ச்சியை மேம்படுத்த முடியும் என்று பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலகர் ஆர். மகேஸ்வரன் தெரிவித்தார்.

திகனை தமிழ் இலக்கியப் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு திகனை ரஜவெல இந்து தமிழ் தேசியப் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபரும் திகனை தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவியுமான திருமதி கோகிலேஸ்வரி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்மொழித் துறைத் தலைவியும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சோதிமலர் ரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் விசேட அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலகர் ஆர். மகேஸ்வரன் கலந்து கொண்டார். அவர் அங்கு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். இந்நிகழ்வில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




இதன் போது கொட்டக்கலை கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஜே. சற்குருநாதன் சமூக சேவையாளர் செல்லையா நல்லையா உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இருவெட்டு வெளியீடு, பாடசாலை மாணவர்களுடைய கலை இலக்கிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### பாராளுமன்றம் 29 ஆம் திகதி கூடுகிறது

# அமர்வுகள் தொடர்பில் கலந்துரையாடும் விசேட கூட்டம் 25 ஆம் திகதி

லோரன்ஸ் செல்வநாயகம்



அடுத்த வார சபை அமர்வுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்ற விவகாரம் தொடர்பான தெரிவுக்குழுவின் விசேட கூட்டம் 25 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்து கட்சித்தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் எதிர்வரும் 29 ஆம் திகதி கூடவுள்ள நிலையில் அன்றைய தினம் மின்சார கட்டணத்தை 75% மாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெறவுள்ளது. அதற்கான பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைக்கவுள்ளது. அதேவேளை, எதிர்வரும் நான்கு மாதங்களுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இம் மாதம் 30, 31 மற்றும் செப். 01. மற்றும் 02 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

04

# ஜனாதிபதியின் இலக்குகள் நிறைவேறி வருகின்றன

## UNP பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்ற நோக்கத்தை தற்போது படிப்படியாக நிறைவேற்றி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காகவே நாட்டை பொறுப்பேற்றார். அவர் தற்போது தமது பொறுப்பை படிப்படியாக நிறைவேற்றி வருகிறார். நாட்டில் தற்போது எரிபொருள் வரிசை சமையல் எரிவாயு வரிசை இல்லாதொழிக்கப்பட்டு வழமையான நிலை திரும்பியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்கியபோது நாட்டை பொறுப்பேற்று பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண நடவடிக்கையெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். நாட்டைப் பொறுப்பேற்பதற்காக அவர் பல

04

# மண்ணெண்ணெய் 253 ரூபாவால் அதிகரிப்பு

## நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு

லோரன்ஸ் செல்வநாயகம்

மண்ணெண்ணெய்யின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை 253 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 87 ரூபாவாக சந்தையில் விற்பனை செய்யப்பட்டது.

ஒரு லீற்றருக்கு 253 ரூபா விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் புதிய விலை 340 ரூபாவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி அலுவலக பணிப்பாளர் நாயகமாக ரஜித் கீர்த்தி தென்னகோன்



தென் மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநரான ரஜித் கீர்த்தி தென்னகோன், ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாக (சமூக விவகாரங்கள்) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிவில் அமைப்புகள், மனித உரிமைகள், தேர்தல் கண்காணிப்பு உள்ளிட்ட பல துறைகளில் பணியாற்றிய தொழில் வல்லுநர் என்பது குறிப்பிடத்தக்கது. சமூக விவகாரங்கள்,பொருளாதார மறுமலர்ச்சி என்பன தொடர்பில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் இவருக்கு அனுபவம் உள்ளது. கீர்த்தி தென்னகோன் வெகுஜன தொடர்பு முதுகலைப் பட்டதாரியென்பதும் குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகங்கள் செப்டம்பரில் மீள ஆரம்பம்

## மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

විශ්ව විද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
University Grants Commission

நாடளாவிய அனைத்து பல்கலைக்கழகங்களையும் அடுத்தமாத நடுப்பகுதியில் கல்வி நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கிடையில் நேற்றைய தினம் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றது.

அதன்போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். அதற்கிணங்க செப்டம்பர் மாத நடுப்பகுதியில் நாடளாவிய அனைத்து பல்கலைக்கழகங்களையும் கல்வி நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் தற்போது சில பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பரீட்சை

04

### கடலில் வீசப்பட்ட 4.5 மில். பெறுமதியான

# போதைப்பொருட்களை கண்டுபிடித்த கடற்படை

மன்னார் நெடுகுடா பகுதியில் அதிரடி



மன்னார், நெடுகுடா கடற்கரைப் பகுதியில் கடந்த 20ஆம் திகதி காலை இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது, கடலில் குவிக்கப்பட்டிருந் த போதைப்பொருட்களை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் நெடுகுடா கடற்கரை பகுதியில் நடாத்திய விசேட ரோந்து நடவடிக்கையின் போது வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட போதைப் பொருட்கள் பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு நீருக்குள் புதைக்கப்பட்டிருந்ததை கடற்படையினர்

04

# சுயதொழிலில் ஈடுபடும் விசேட தேவையுடையோர் அனுசரணையை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம்

## பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



சுயதொழிலில் ஈடுபட்டு வரும் விசேட தேவையுடையோருக்கு அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் அனுசரணைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுயதொழிலில் ஈடுபடும் விசேட தேவையுடையோருக்கு வழங்கப்படும் அனுசரணையை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு விதத்திலும் விசேட தேவையுடையோர் சுமார் ஒரு இலட்சம் பேர் நாடளாவியரீதியில் சுயதொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், வருடாந்தம் இத்தகைய 500க்கும் மேற்பட்டோர்உயர்தொழில்வாய்ப்புக்களுக்காக விண்ணப்பித்து வருவதாகவும் பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

### பாப்பாண்டவரின் அழைப்பை ஏற்று

# மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கான் செல்கிறார்




கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை எதிர்வரும் 24ம் திகதி மீண்டும் வத்திக்கானுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புனித பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸின் அழைப்பின் பேரில் அவர் இவ்வாறு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரியவருகிறது.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வருகையை பாப்பாண்டவர் கட்டாயப்படுத்தியுள்ளார் என கத்தோலிக்க சபையின் பேச்சாளர் ஒருவர் தெற்கு ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி கர்தினால்களை நியமிக்கும் நிகழ்வில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் பங்கேற்கவுள்ளார். இந்த விசேட நிகழ்வில் உலகம்

04



ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் இம்முறை மிகச்சிறப்பாக இடம்பெற்றது. ஆலய தலைவர் ஸ்ரீமான் மஹாகார்த தாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த விசேட பூஜை வழிபாடுகளில் ஐதேகவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

### அரசின் அனுசரணை கிடைத்தால்

# பாணின் விலையை 50 ரூபாவால் குறைக்கலாம்

ஏனைய உற்பத்திகளின் விலைகளையும் வெகுவாக குறைக்க முடியும்

பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேக்கரி உரிமையாளர்களுக்கு தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுத்தருவார்களானால் ஒரு இறாத்தல் பாணின் விலையை 50 ரூபாவால் குறைக்கமுடியுமென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார். அவ்வாறான ஒத்துழைப்பு கிடைக்குமானால் பாணின் விலை மட்டுமன்றி பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறிப்பிடத்தக்க அளவில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அதன்மூலம் மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பேக்கரி உற்பத்திகளுக்கு தேவைப்படும் முக்கிய மூலப்பொருட்களான மா, சீனி, மாஜரின் மற்றும் முட்டை

04

# தமிழகத்தில் தஞ்சம் கோரியவர்களுள் வவுனியா கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்

## பிணையில் விடுவிக்கப்பட்டவர் தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தகவல்

யாழ்.விசேட நிருபர்

இலங்கையில் இருந்து கடந்த இரு நாட்களில் தமிழகம் சென்று தஞ்சம் கோரியுள்ள 16 பேரில் ஒருவர் கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மற்றும் நேற்றைய தினம் திங்கட்கிழமை ஆகிய இரு நாட்களில் யாழ்ப்பாணம் , கிளிநொச்சி மற்றும் திருகோணமலையை சேர்ந்த 06 குடும்பங்கள் தமிழகம் தனுஷ்கோடி பகுதியை சென்றடைந்துள்ளனர்.

குறித்த 06 குடும்பங்களை சேர்ந்த 16 பேரிடமும் தமிழக கடலோர காவல் படையினர் மற்றும் க்யூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை தஞ்சம் கோரி சென்றவர்கள் தொடர்பில் இலங்கை பொலிஸார் மேற்கொண்டுள்ள விசாரணைகளின் அடிப்படையில் 16 நபர்களில் ஒருவர் கிளிநொச்சி பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றினை உடைத்து

04

திகதி
21.08.2022
ஞாயிற்றுக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4854
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,064,570.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 0 3 5 0 5 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 38,973,787.60

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 163
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,550,140.00
இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 05 17 42 43
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 4,087,490.80

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3096
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,316,900.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 20 41 61 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 70,934,050.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 884
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,840,240.00
வெற்றி இலக்கினம் A
வெற்றி இலக்கங்கள் 12 30 39 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 122,179,784.00

கோடி 26+
Mega POWER
மெகா பவர்
ஆங்கில எழுத்து Q
சுப்பர் நம்பர் 07
வெற்றி எண்கள் 37 53 68 74
சீட்டிழுப்பு இலக்கம் 1202
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,247,620.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 266,720,142.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2
பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk
Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# சிரேஷ்ட DIG மீதான தாக்குதல்: சந்தேகநபர்கள் 8 பேருக்கு பிணை

மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது தாக்குதல் நடத்திய 8 பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# பாராளுமன்றத்தை கலைப்பதற்கான காலமாற்றம் தொடர்பில் 80 எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு மனு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

22வது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாராளுமன்றத்தை இரண்டரை வருடங்களில் ஜனாதிபதிக்கு கலைப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் சரத்தை திருத்தம் செய்யாவிட்டால் அந்த சட்டமூலம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் வாக்களிப்பில் கலந்துகொள்ளப் போவதில்லையென சுமார் 80 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு மனுவொன்றை ஜனாதிபதிக்கு கையளித்துள்ளனர்.

அவ்வாறு அந்த மனுவில் கையொப்பமிட்டுள்ளோரில் பொதுஜன பெரமுன எம்.பிக்கள், எதிர்க் கட்சி மற்றும் பாராளுமன்றத்தில்

04

## இந்தியாவில் தக்காளி காய்ச்சல் பரவல்;

# ஐந்து வயதுக்குட்பட்ட 82 குழந்தைகள் பாதிப்பு

இந்தியாவில் பரவி வரும் தக்காளி காய்ச்சலால் 5 வயதுக்குட்பட்ட 82 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த காய்ச்சலை கட்டுப்படுத்தத் தவறினால், பெரியவர்களுக்கு பரவி மோசமான விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதாக இத்துறை சார்ந்த நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு குழந்தைக்கு தக்காளி காய்ச்சல் இருப்பது கடந்த மே 6ஆம் திகதி முதன் முதலில் கண்டறியப்பட்டது. பின்னர் நெடுவத்தூர், ஆரியங்காவு, அன்சால் உள்ளிட்ட பகுதிகளுக்கு இந்த காய்ச்சல் பரவியுள்ளது.



### கட்டுப்படுத்தாவிடின் மோசமான விளைவு என எச்சரிக்கை

இதுவரை 5 வயதுக்குட்பட்ட 82 குழந்தைகளும், 10 வயதுக்குட்பட்ட 26 சிறுவர்களும் இந்த காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

இந்த வைரஸால் பாதிக்கப்படுவோருக்கு, சிக்குன்குன்யா வைரஸால் பாதிக்கப்பட்டோருக்கு ஏற்படுவது போன்ற அறிகுறிகள் தோன்றும். முதலில் அதிக காய்ச்சல் ஏற்படும். பின்னர் உடல் முழுவதும் சிறு கொப்புளங்கள் தோன்றும். இது சற்று பெரிதாகி தக்காளி போல சிவப்பாக தோன்றும். இதனாலேயே இதற்கு தக்காளி காய்ச்சல் என பெயரிடப்பட்டுள்ளது. இது தொற்றும் தன்மை கொண்டதாகும்.

பெரும்பாலும் குழந்தைகளுக்கு இந்த காய்ச்சல் ஏற்படுகிறது. உடல், மூட்டு வலி கடுமையாக இருக்கும். வாந்தி, வயிற்றுப் போக்கு இருக்கும். அதேநேரம் இந்த காய்ச்சலால் உயிருக்கு ஆபத்து இல்லை என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்த காய்ச்சல் பரவுவதை கட்டுப்படுத்துவது குறித்து நிபுணர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

## வசந்த முதலிகே உட்பட...

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ஹாஷாந்த ஜீவந்த குணத்திலக்க ஆகிய மூவரையும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

## குறைந்த வருமானம் பெறும்...

சுத்திகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில் எதிர்வரும் சில தினங்களில் மண்ணெண்ணெயை சந்தைக்கு விநியோகிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்தியாவிடமிருந்து 21,000 மெ.தொன்...

4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உரம் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவிக்கிறது.

## காலிமுகத்திடலுக்கு நஷ்டம்...

பெறுவதற்கு தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதிகார சபை கூறுகிறது.

அந்தக் காணியின் மீள்குடியேற்றம் மற்றும் அடிப்படைப் பணிகளுக்காக 1.5 இலட்சம் ரூபாவும் புல் வெட்டுவதற்கு 47.5 இலட்சம் ரூபாவும் செலவிடப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காலி முகத்திடல் மைதானத்தைச் சுற்றியுள்ள பகுதிக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு செயற்பாட்டாளர்களிடமிருந்து நட்டஈடு பெற்றுக்கொடுக்க தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தனது பதவியை இராஜினாமா செய்யுமாறுகோரி சுமார் 3 மாதங்களாக காலி முகத்திடலைச் சுற்றியுள்ள பகுதியில் அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் தங்கியிருந்தனர். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து வெளியேறியதையடுத்து, செயற்பாட்டாளர்களை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு நீதிமன்றம் அறிவித்ததுடன், அதன்படி அவர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது.

## தமிழக சுற்றுலா அமைச்சரை...

உதவியுடன், சென்னையில் இலங்கை கலாசார நிகழ்ச்சி மற்றும் உணவுத் திருவிழாவைக் கொண்டாடுவது குறித்தும் இதன்போது ஆலோசிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

## பிரித்தானிய பெண்ணை...

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், பிரித்தானிய சுற்றுலாப் பயணியை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான ஆவணங்களில் கடந்த வாரம் ஜனாதிபதியும் கையொப்பமிட்டுள்ளார்.

ஆகஸ்ட் 2 ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள அவரது இல்லத்தில் குடிவரவு அதிகாரிகள் குழுவொன்றை அணுகிய பிரேசருக்கு அவரது பயண ஆவணங்களை விசாரணைக்காக திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறும் அதன் தலைமை அலுவலகத்திற்கு விசாரணை நடத்த ஏழு நாட்களுக்குள் தெரிவிக்குமாறும் அவருக்கு அறிவிக்கப்பட்டது என்றார்.

## ரூபவாஹினி ஒளிபரப்பு...

சமூக செயற்பாட்டாளரான சமிந்த கெலும்பிரிய அமரசிங்க (45) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு வந்து சரணடைந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஜூலை 13 ஆம் திகதி ரூபவாஹினி கலையகத்துக்குள் நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஆர்ப்பாட்டக்காரரான தானிஷ் அலி என்ற சந்தேக நபரும் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிக கட்டணம் வசூலித்த...

தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது இந்த பஸ்கள் அடையாளம் காணப்பட்டதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக பணத்தை வசூலித்தமை, கட்டண விபரங்களை காட்சிப்படுத்தாமை, பயணச்சீட்டுக்களை வழங்காமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த தரப்பினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் இத்தகைய சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு இணையாக வீதிப் பயணப் போக்குவரத்து அதிகார சபையினால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 09 மனுக்கள் மீதான விசாரணை...

நீதிபதிகளான புவனேக அலுவிகார, அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே குறித்த மனு மீதான விசாரணை இன்றைய தினத்திற்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் 9 மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதன் மீதான விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

22 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என உத்தரவிடுமாறு கோரியே மேற்படி மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு,கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்ட ஒன்பது பேரே நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவில் பிரதிவாதியாக சட்டமாஅதிபர் பெயரிடப்பட்டுள்ளார். 22 ஆவது திருத்தச் சட்டமூலம் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவினால் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவை குறிப்பிடத்தக்கது.

## அலரி மாளிகையில் திருடியவர்...

சந்தேக நபர் இராஜகிரிய பண்டார நாயக்கபுரவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகநபரின் வீட்டில் 200 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான பித்தளை சுவர் அலங்காரங்கள், கமரா உபகரணங்கள் மற்றும் கமரா பை ஆகியவற்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

60 வயதுடைய நபர் செயற்பாட்டாளர் என்ற போர்வையில் மற்றொரு குழுவினருடன் அலரிமாளிகைக்குள் நுழைந்து அங்குள்ள ஊடக அலுவலகத்தில் இருந்த சுவர் அலங்காரங்களை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை அலரிமாளிகையின் ஊடகப் பிரிவில் இருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

அதனை தொடர்ந்து பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து சொத்துக்களை திருடிய ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

## BA 5 கொரோனா திரிபு வைரஸ்...

இனங்காணப்பட்டுள்ளதாக ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஜீவவாயு ஆய்வுப் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட 67 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதையடுத்து அதில் 60 மாதிரிகள் மூலம் கடுமையான கொரோனா திரிபு வைரஸ் அப்பகுதிகளில் பரவியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய ஏழு மாதிரிகளும் ஒமிக்ரோன் திரிபு வைரஸாக இனங்காணப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

அந்தவகையில் கொழும்பு, கம்பஹா, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலிருந்து மேற்படி மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதன்மூலமே இந்த நான்கு மாவட்டங்களிலும் மிக வேகமாக பரவும் பிஏ5 கொரோனா திரிபு வைரஸ் இனங்காணப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் மேலும் பல பிரதேசங்களில் இந்த திரிபு வைரஸ் பரவியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் தமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிகள் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்பே பேராசிரியர் சந்திம ஜிவந்தர தலைமையிலான குழு இதனைத் தெரிவித்தது.

## அம்பலாங்கொடையில் துப்பாக்கிச்சூடு!...

மேலும் இருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் அம்பலாங்கொடை குளிகொட பிரதேசத்தைச் சேர்ந்த தனுஷ்க டி சொய்சா மற்றும் அம்பலாங்கொடை சேனமுல்லை பிரதேசத்தைச் சேர்ந்த ரணசிங்க சந்துன் மதுசங்க ஆகிய இரண்டு இளைஞர்களே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிந்துள்ளனர். அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பொலிஸார் மேற்படி நபர்கள் நால்வரும் அம்பலாங்கொடை தெல்துவ பகுதி ஹோட்டலொன்றில் அமர்ந்திருந்த போது இனந்தெரியாத துப்பாக்கிதாரியுன் வேட்டுக்கு இலக்காகியுள்ளாதாகவும் ரி56 ரக துப்பாக்கி அதற்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற வேளை அந்த பிரதேசத்தில் மின் துண்டிப்பு இடம்பெற்றிருந்ததாகவும் சில வெற்றுரவைகளை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இம்ரானுக்கு எதிராக...

தனது நெருங்கிய உதவியாளரான ஷெஹ்பாஸ், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள், மற்றும் பெண் நீதிபதி ஒருவரை எச்சரிக்கும் வகையில் நேற்றுமுன் தினம் இம்ரான் ஆற்றிய உரையை அடுத்து, இம்ரான் கானுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இம்ரான் கானின் உதவியாளர் ஷெஹ்பாஸ் ஜில் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார். அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்களை தூண்டிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபர், பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படும் எனக் கூறிய இம்ரான் கான், ‘உங்களை நாம் விட்டுவிட மாட்டோம்’ என்றார்.

அத்துடன் ஷெஹ்பாஸ் ஜில்லை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி, ஸெபா சௌத்திரிக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதற்கு அவர் தயாராக இருக்க வேண்டும்’ என்றார்.

இந்நிலையில், பாகிஸ்தான் பயங்கரவாத தடைச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் இம்ரான் கானுக்கு எதிராக பொலிஸார் குற்றச்சாட்டு பதிவு செய்துள்ளனர்.

இம்ரான் கான் கைது செய்யப்படக் கூடும் என ஊகங்கள் பரவியுள்ளன.

அவரை கைது செய்யவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இம்ரான் கானுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்ததாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் இம்ரான் கானின் பிரிஇ கட்சி முக்கியஸ்தர்கள் இது குறித்து அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இம்ரான் கானின் கைது ஒரு சிவப்புக் கோடாக அமையும் என இம்ரான் கானுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் அவரின் வீட்டை சூழ்ந்துள்ளனர் என பிரிஇ கட்சி முக்கியஸ்தர் பவாத் சௌத்திரி தெரிவித்துள்ளார்.

## அரசுடன் இணைந்து செயற்பட...

அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குமிடையில் விசேட சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலை உள்ளிட்ட தற்போதைய சூழ்நிலை தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வருமாறு இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார். அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசாங்கத்தின் சர்வகட்சி வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே அரசாங்கத்தின் அனைத்து சிறந்த திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

## நாட்டை மீட்டெடுக்க தமிழ்...

ஒன்றிணைந்து பாடுபட்டனர். சுதந்திரம் பெற்ற பிறகுதான் பிரிந்தனர்.

இப்போது நமக்கு முன்னால் ஒரு கடினமான காலம் உள்ளது. நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். சுதந்திரம் பெற இடதுசாரித் தலைவர்கள் ஒன்று சேர்ந்தனர். ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்ற தமிழ்த் தலைவர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்தனர். நாம் அனைவரும் மீண்டும் இணைந்து செயற்பட வேண்டிய நேரம் வந்து விட்டது" என்றார்.

## காந்தி ஆச்சிரமத்தில் நூல்...

நூற்றுள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பதிவில்,

மகாத்மா காந்தி ஆச்சிரமத்திற்குச் செல்வது மிகவும் எளிமையான அனுபவங்களில் ஒன்றாகும். அவருடைய வாழ்க்கை இன்றும் நம்மை ஊக்குவிக்கிறது.

"நிகழ்காலத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பொறுத்தே எதிர்காலம் தங்கியுள்ளது", இது முன்னெப்போதையும் விட இலங்கைக்கு தற்போது பொருந்தும் என பதிவிட்டுள்ளார்.

## முட்டைகளை பதுக்கி...

களஞ்சியப்படுத்துவோரை கண்டறிவதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகிறது. வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகும். பழுப்பு அல்லது சிவப்பு நிற முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபா என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தையில் முட்டை விலை அதிகரித்துள்ள நிலையில் பதுக்கி வைக்கப்படும் முட்டையை அரசுடமையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## அமர்வுகள் தொடர்பில் ... (03 ஆம் பக்கத் தொடர்)

இடைக்கால வரவு செலவுத் திட்ட சட்டமூலம் கடந்த 9 ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின்... (03 ஆம் பக்கத் தொடர்)

கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். எவரும் அதற்கு பதில் வழங்கவில்லை. அதனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் நாட்டை கையளித்துள்ளார் என்றும் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உர நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருட்களை... (03 ஆம் பக்கத் தொடர்)

கைப்பற்றியுள்ளர். கடத்தல் காரர்காளால் கடல்வழியாக இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் மருந்துகளை கொண்டு வர முயற்சித்து அவற்றை கொண்டு வர முடியாமல் கைவிட்டிருக்கலாம் என இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இந்த போதைப்பொருளின் மொத்த சந்தைப் பெறுமதி 4.5 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும் என நம்பப்படுவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## பல்கலைக்கழகங்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். அதை வேளை விரிவுரைகளுக்கு சமூக மளிக்க முடியாத மாணவர்கள் ஒன்லைன் மூலம் அந்த விரிவுரைகளில் பங்கேற்பதற்கு வாய்ப்பளிப்பது தொடர்பிலும் நேற்றைய பேச்சு வார்த்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மெல்கம் ரஞ்சித்... (03 ஆம் பக்கத் தொடர்)

முழுவதிலும் உள்ள 120 கர்தினால்கள் பங்கேற்கவுள்ளனர். மூன்று நாட்கள் வத்திக்கானில் தங்கியிருந்து இலங்கையின் நிலைமைகள் குறித்து பாப்பாண்டவரிடம் கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாணின் விலையை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆகியவற்றின் விலைகள் குறைவடைந்துள்ள நிலையில் அதன் மூலமான பயனை பேக்கரி உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியுமானால் பாணின் விலை மட்டுமன்றி அனைத்து உற்பத்திப்பொருட்களின் விலைகளையும் குறைக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

200 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய கோதுமை மா ஒரு கிலோ கோதுமை மா மாபியா காரணமாக 280 ரூபாவுக்கே பேக்கரி உரிமையாளர்களுக்கு கிடைப்பதாகவும் முட்டையின் விலை அநீதியான வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்தும்கூட இதுவரை அதற்கான விலை குறைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்குமானால் தற்போது 190 ரூபாவரை விற்கப்படும் பாணின் விலையை 50 ரூபாவால் குறைக்கமுடியும். 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் பணிஸ் உள்ளிட்ட பொருட்களை 25 ரூபாவால் குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தலையிட்டு இந்த நெருக்கடியை தீர்ப்பதற்கு ஒத்துழைக்காவிட்டால் பிஸ்கட் சாப்பிட கூடாது என கருதும் மக்களின் எண்ணம் பேக்கரி உற்பத்திகளையும் உண்ணாத நிராகரிக்கும் நிலை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வவுனியா கொள்ளைச்... (03 ஆம் பக்கத் தொடர்)

நகைகளை கொள்ளையடித்த குற்ற செயலின் பிரதான சந்தேக நபர் என கண்டறிந்துள்ளனர். குறித்த நபர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ள நிலையில் இலங்கையில் இருந்து தமிழகம் தப்பி சென்றுள்ளார் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனையவர்கள் தொடர்பிலும் இலங்கை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பாராளுமன்றத்தை... (03 ஆம் பக்கத் தொடர்)

சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த மனுமூலம் பாராளுமன்றத்தை கலைப்பதற்காக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள இரண்டரை வருடத்தை நான்கரை வருடமாக மாற்றம் செய்யவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதேவேளை, 22 வது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாராளுமன்றத்தை இரண்டரை வருடத்தில் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சரத்து தொடர்பில் அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் மாற்றுக் கருத்துக்கள் நிலவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 22வது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. விரைவில் அதுதொடர்பான விவாதம் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மறைவாய் உள்ளதையும் கடவுள் காண்கின்றார் என்ற உணர்வே நம்மை வாழ வைக்கும்

எருசலேம் நோக்கி நெடும் பயணம் மேற்கொண்ட இயேசு ஓர் ஊருக்கு வருகின்றார். அப்பொழுது ஒருவர் இயேசுவிடம் கேள்வி கேட்கின்றார்.

"ஆண்டவரே மீட்புப் பெறுவோர் சிலர் மட்டும் தானா?" இக்கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் கூறவில்லை. ஓர் எடுத்துக்காட்டின் மூலம் பதில் தருகின்றார்.

இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள். ஏனெனில் பலர் உள்ளே செல்ல முயன்றும் இயலாமற்போகும் (லூக். 13:24) என்கிறார்.

மீட்புப் பெறுவது அதாவது வாழ்வின் இறுதியில் வான் வீடு அடைவது இதுதான் நமது இலக்கு. இது சாத்தியமா? ஆம் என்கிறார் இயேசு. ஆனால் கடினம். முயற்சி செய்ய வேண்டும் என அறிவுரை கூறுகின்றார்.

கிறிஸ்தவன் என்ற காரணத்தினால், திருமுழுக்குப் பெற்றுவிட்டோம் என்ற காரணத்தினால் மோட்சம் நிச்சயம் என்றில்லை. மோட்சமடைய நாம் முயற்சி செய்ய வேண்டும். அதுவும் தொடர் முயற்சி அவசியம்.பலர் உள்ளே செல்ல முயன்றும் இயலாமற்போகும் என்பது ஆண்டவரின் எச்சரிக்கை. எனவே உழைக்க வேண்டும். தோல்வி ஏற்பட்டாலும் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

முதலில் வாழ்வு பெற வேண்டும் என்ற ஆசை இருக்க வேண்டும். அடைந்தே தீருவேன் என்ற நம்பிக்கை வேண்டும். நம்மிடம் உள்ள தேவையில்லாதவற்றைக் கழிக்கவும். தேவையானவற்றைக் கூட்டவும் தெளிவு வேண்டும்.

என்னிடம் நீக்கப்பட வேண்டியது எதுவுமில்லை என்று என் நாக்கு சொல்லலாம். மனம் சொல்லுமா? மனச்சாட்சி சொல்லுமா? நீக்கப்பட வேண்டியவை எத்தனை என்னிடம் உள்ளன என்பது என் மனதுக்குத் தெரியாதா என்ன? மனச்சாட்சிக்கு உண்மையுள்ளவர்களாக நடக்க முயல்வது நாம் கற்கவேண்டிய முதல் பாடம்.



**இரண்டாவது பாடம்:** புறம் பேசுவதைத் தவிர்ப்பது. நேரில் ஒன்றும் பின்னால் ஒன்றும் பேசும் பழக்கம் நம்மிடம் ஒரு பிணியாகவே உள்ளது. இதைப் பற்றி புனித அல்போன்ஸ் லிகோரியார் கூறும்போது புறம்பேசுவது என்பது ஒரு பேய். வீட்டிற்கு ஒரு பேய் என்றால் மடத்திற்கு ஓட்டுக்கு ஒரு பேய் என்கிறார். உண்மையைத் திரித்துக் கூறுவதும் சுயநலக் கண்ணோட்டத்தில் பிறரின் எல்லாச் செயலையும் பார்ப்பதும் வதந்திகளைப் பரப்புவதும் தவிர்க்கப்பட வேண்டும். வேண்டுமென்றே ஒருவரின் பெயரைக் கெடுப்பதாலும் அவதூறு பேசுவதாலும் எழுதுவதாலும் நாம் சாதிக்கக் கூடியது என்ன? வாள் எடுத்தவன் வாளால் மடிவான். வினை விதைத்தவன் வினையை அறுப்பான். பூமராங் போன்று அது நம்மையே பாதிக்கும்.

**மூன்றாவது பாடம்:** நல்லவர்களை மதிக்கவும் அவ்வாறில்லாதவர்களை ஒதுக்கவும் மனதில் உறுதிகொள்ள வேண்டும். பொதுவாக நாம் யாரிடம் அச்சம் கொள்கிறோமோ அவர்களுக்கே விசுவாசமாக இருக்கிறோம். யாரை நல்லவர் என்று கருதுகிறோமோ அவர்களுக்குத் துரோகம் செய்கிறோம். முன்னதற்குக் காரணம் பயம். இரண்டாவதற்கு அவர் ஒன்றும் சொல்லமாட்டார் என்கிற நம் சுயநலம். இதை மாற்றாவிட்டால் நாம் வாழ்வு பெறுவது சிரமம்.குன்றின் மேல் நின்று பார்ப்பதற்கும் குன்றின் அடியில் இருந்து பார்ப்பதற்கும் வேறுபாடு உள்ளது. முந்தையது பரந்த பார்வை. பிந்தியது குறுகிய பார்வை. குன்றின் கீழே இருப்பவர் குன்றின் மேலே இருப்பவரின் பார்வை சரியில்லை. நான் பார்ப்பது தான் சரி என்று சொல்ல முடியுமா? உயர்ந்த எண்ணம், நிறைந்த அனுபவம், வயது, ஞானம் என பரந்த சிந்தனையாளர்களைப் போற்றவும் மதிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். நமது குறுகிய பார்வையால் அவர்களை எடைபோடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

**நான்காவது பாடம்:** முதல் பாடத்தை ஒத்தது. கடவுள் பயம், நம் செயல், சொல் அனைத்தையும் கடவுள் கவனிக்கின்றார் என்ற எண்ணம், மறைவாய் உள்ளதையும் கடவுள் காண்கின்றார் என்ற உணர்வு நம்மை வாழ வைக்கும் என்பதை மறத்தலாகாது.பின்பற்றுவது கடினம்தான். ஆனால் முடியாதது அல்ல. முயற்சி செய்தால் வெற்றி பெறலாம்.

அருட்பணி
முனைவர் ம.அருள்

# ஆண்டவரின் எண்ணங்களோ என்றென்றும் நிலைத்திருக்கும்

"ஆண்டவரின்எண்ணங்களோ என்றென்றும் நிலைத்திருக்கும்; அவரது உள்ளத்தின் திட்டங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.' (திருப்பாடல் 10,11). தீயவரின் எண்ணம் எப்போதும் தீய வழியில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் நல்லவர்களான கடவுளின் அடியார்களை அழித்தொழிக்கவுமே முற்படுகிறது. ஆனால், நல்ல எண்ணங்களையும் திட்டங்களையும் வழிமுறைகளையும் கொண்ட கடவுள் தீயவர்களை முறியடித்து எப்போதும் வெற்றிகொள்கிறார். அதேவேளை தனது நம்பிக்கைக்குரிய அடியார்களையும் அற்புதமாக காப்பாற்றுகிறார்.



தீமைகள் செய்த ஒருவன், இறந்தபின் நரகத்திலுள்ள பெரிய பாதாள குழியில் தள்ளப்பட்டான். தன்னைக் காப்பாற்றுமாறு அங்கிருந்து கடவுளை நோக்கிக் கத்திக் கொண்டே இருந்தான். அவன் சத்தம் தாங்க முடியாமல் கடவுள் அவனுக்கு உதவ எண்ணினார்.

அவன் உலகில் வாழ்ந்த போது காலுக்கடியில் ஊறிய சிலந்திப் பூச்சியை, தன்னை அறியாமல் மிதிக்காமல் விட்டு விட்ட புண்ணியம் மட்டுமே, தீமை செய்த அவனது கணக்கில் இருந்தது. இந்த ஒரே ஒரு நற்செயலுக்காக அவனுக்கு உதவ எண்ணிய கடவுள், சிலந்தி நூல் ஒன்றை பாதாளகுழியில் இறக்கி அவனை மேலே வருமாறு அழைத்தார்.

நூலைப் பிடித்து மேலே ஏறியவன், பாதி தூரம் வந்ததும், தன் பின்னே வேறு சிலரும் அதே நூலில் ஏறி வருவதைக் கண்டு, கோபம் அடைந்து தனக்குக் கீழுள்ள நூலை வெட்டி விட்டான். இச்செயலால் அவன் செய்த ஒரு புண்ணியமும் போய், அவனது பாவக் கணக்கில் சேர்ந்து, நூல் முழுவதும் அறுந்து பாதாளத்தில் மீண்டும் விழுந்து விட்டான்.

தீமை விதைப்பவர்கள் தங்களின் தீய எண்ணங்களாலேயே அழிந்துபோகிறார்கள். அதாவது வினை விதைத்தவன் வினை அறுப்பான். தீயவர்கள் தீமை செய்யத் தயங்குவது இல்லை; சொல்லி முடிப்பதற்குமுன் அவர்கள் தீமைகளைச் செய்து முடித்து விடுவார்கள். ஆனால், நல்லவர்கள் தீமை செய்ய அஞ்சுவர் அந்த நினைப்பே அவர்களை அச்சுறுத்தும். ஒரு தீமை இன்னொரு தீமைக்குக் காரணம் ஆகி விடுகிறது. (ஸ)




## புளியந்தீவு புனித மரியாள் பேராலய திருவிழா









மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தொன்மையான கத்தோலிக்க ஆலயங்களில் ஒன்றான புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கடந்த ஆகஸ்ட் 06ஆம் திகதி மாலை பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி. ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளார் தலைமையில் கொடயேற்றத்துடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று வெஸ்பர்ஸ் ஆராதனை, அன்னையின் திருச்சுரூப பவனி என்பன இடம்பெற்றன.15ஆம் திகதி காலை திருவிழா கூட்டுத்திருப்பலி மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (படங்கள்: கல்லடி குறூப் நிருபர்)



# தலைமுறை தலைமுறைகளாக மனங்களில் வாழ்ந்து வரும் நமது புனிதர்கள்

இவ்வுலகில் பிறவி எடுத்த எல்லாருமே பிறவிப் பலனை வரலாற்று ஏட்டில் பதித்து விட்டுச் செல்வதில்லை. அவ்வாறு வாழ்ந்த எல்லாரையும் வரலாறும் நினைவுகூர்வதில்லை. அரிய சாதனைகளால் வரலாற்றில் தடம் பதித்தவர்கள், சீர்மிகு சிந்தனைக்கு வித்திட்டவர்கள், மனிதர்களாக, மனிதநலம் காக்க வாழ்வை அர்ப்பணித்தவர்கள்... இத்த கைய மாமனிதர்களின் பூத உடல் மறைந்தாலும் புகழ் உடல் மட்டும் மறைவதே இல்லை. இவர்கள் காலங்கள் தோறும் தலைமுறை தலைமுறைகளாக மனித மனங்களில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றனர்.

கத்தோலிக்கத் திருஅவையின் தொடக்க கால வரலாறு முதல், இன்றுவரை மாமனிதர்கள் இருந்து வருகின்றனர். இவர்களில் பலரை திருஅவை புனிதர்கள், அருளாளர்கள் அல்லது முத்திப்பேறு பெற்றவர்கள், இறைஊழியர்கள் என்று அழைக்கின்றது.

இவர்களை, இயேசு கிறிஸ்துவோடு இணைந்து நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள் (எபேசி.1:1) என தூய பவுல் பதிவுசெய்துள்ளார். திருஅவையின் தொடக்க காலத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவரும் புனிதர்கள் என்றே அழைக்கப்பட்டனர். பின்னர் அனைத்துக் கிறிஸ்தவர்களும் புனிதர்கள் என்று அழைக்கப்படுவது மாறி, இவ்வுலக வாழ்வில் கிறிஸ்துவின் நற்செய்தியை வாழ்ந்து காட்டுவதில் கடுமையான போராட்டங்களை மேற்கொண்டு வீரமரணம் எய்தியவர்கள், நற்செயல்களால் மக்கள் மனதில் ஆழத்தடம் பதித்தவர்கள் போன்றோர் புனிதர்கள் என அழைக்கப்படலாயினர்.

சுருங்கச்சொல்லின் இவர்கள், கிறிஸ்துவ நம்பிக்கையில் இறுதிவரை நிலைத்திருந்து தங்களின் தலைசிறந்த புண்ணியப் பண்புகளால் அசாதாரண நிலையிலும் தூய வாழ்வு வாழ்ந்தவர்கள்.

உலகில் கிறிஸ்தவம் பரவத் தொடங்கிய காலக்கட்டத்தில் கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்த கிறிஸ்தவர்கள் பலர், கொடிய விலங்குகளுக்கு இரையாகப் போடப்பட்டனர்.

உயிரோடு எரிக்கப்பட்டும், அம்புகளால் குத்தப்பட்டும், கண்கள் தோண்டப்பட்டும், உயிரோடு தோலுரிக்கப்பட்டும்... இவ்வாறு அவர்கள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாகி கொல்லப்பட்டனர். திருமறைக்காக உயிரைத் தியாகம் செய்த இவர்கள் அனைவருமே புனிதர்கள் எனப் போற்றப்பட்டனர்.

இத்தகைய கொடூரங்கள் உரோமைப் பேரரசில், கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை இடம்பெற்றன. தியோக்கிளேசியன், மாக்சிமியன், கலேரியுஸ் போன்ற உரோமைப் பேரரசர்களின் ஆட்சி காலங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

அக்காலக் கட்டத்தில் உரோம் நகரின் மண்ணில் இம் மறைசாட்சிகளின் இரத்தம் ஆறாய் ஓடின. இம்மறைசாட்சிகளால் உரோம் மண்ணும் மனிதரும் புனிதம் அடைந்து ள்ளனர். இயேசுவின் திருத்தூதரும், முதல் திருத்தந்தையுமான பேதுரு புறவினத்தாரின் திருத்தூதரான புனித பவுல் ஆகியோர் கொலைசெய்யப்பட்டதும் உரோம் நிலத்தில்தான். அக்காலத்தில் மட்டுமல்ல, உலக வரலாறு முழுவதும் இந்த நவீன காலத்திலும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெறாமல் இல்லை.பல நாடுகளில் எத்தனையோ பொதுநிலை கிறிஸ்தவர்களும், அருட்பணியாளர்களும் கடத்தப்பட்டு கொல்லப்படுகின்றனர், அருட்பணியாளர்கள் ஆலயப் பீடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டுமுள்ளனர்.



நீதிக்காக, ஏழை மக்களின் அடிப்படை உரிமைகள் காக்கப்பட துணிவுடன் குரல் கொடுத்து வந்த இயேசு சபை அருள்பணி ஸ்டேன் சுவாமி போன்றோர் இத்தொழில்நுட்ப காலத்திலும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்படுகின்றனர்.

இயேசு கிறிஸ்துவின் நற்செய்திப் போதனைகளுக்குப் பிரமாணிக்கமாக இருந்து வாழ்ந்து இறைபதம் அடைந்த கிறிஸ்தவர்கள் எல்லோரையுமே திருஅவை புனிதர்கள் பட்டியலில் இணைத்து அவர்களுக்கென்று திருவிழா சிறப்பிப்பதில்லை.

அதற்கென வரைமுறைகள் வகுக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. உரோம் நகருக்கு வெளியே திருத்தந்தை ஒருவரால் புனிதராக அறிவிக்கப்பட்ட முதல் கிறிஸ்தவர் புனித Udalric. Augsburg (893–973)ன் ஆயராகப் பணியாற்றிய இவரை கி.பி 993ஆம் ஆண்டில் திருத்தந்தை 15ம் யோவான் அவர்கள் புனிதராக அறிவித்தார்.

புனித Udalric, Augsburg நகரம், முற்றுகையிடப்பட்டிருந்தபோது அந்நகர மக்களை தம் புண்ணிய வாழ்வால் ஈர்த்தவர்.1983ஆம் ஆண்டில் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் வெளியிட்ட Divinus Perfectionis என்ற திருத்தூது கொள்கை விளக்கத்தில் தரப்பட்டுள்ள வழிமுறைகளே, தற்போது திருஅவையில் ஒருவர் அருளாளராக அறிவிக்கப்படுவதற்கு பின்பற்றப்படுகின்றன.

மேலும், கத்தோலிக்கத் திருஅவையில் புனிதர்களாக அறிவிக்கப்படுவோரின் திருநாள் பொதுவாக அவர்கள் இம் மண்ணுலகைவிட்டு மறைந்த நாளே குறிக்கப்படுகிறது. ஆயினும், அவர்களின் இறப்பு நாளில் வேறு பிரபலமான புனிதர்களின் திருநாள் சிறப்பிக்கப்பட்டால் அவர்களுக்கு விழா எடுக்கும் நாள் வேறு ஒரு நாளில் குறிக்கப்படுகிறது.எடுத்துக்காட்டாக திருத்தந்தை புனித 23ம் யோவான் அவர்கள், 1963ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3ம் திகதி இறைபதம் அடைந்தார். ஆனால் அத்திருத்தந்தையின் திருநாள், அக்டோபர் 11ம் திகதி சிறப்பிக்கப்படுகிறது. 1962ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் திகதியன்றுதான், இத்திருத்தந்தை வரலாற்று சிறப்புமிக்க இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் முதல் அமர்வைத் தொடங்கினார்.

அதேபோல் திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்கள், 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 2ம் திகதி இறைபதம் அடைந்தார். ஆனால் அவரது திருநாள் அக்டோபர் 22ம் திகதி சிறப்பிக்கப்படுகிறது. 1978ஆம் ஆண்டு அக்டோபர் 22ம் தேதியன்று அத் திருத்தந்தை, திருஅவையின் தலைமைப்பணிக்கென திருநிலைப்படுத்தப்பட்டார்.

கத்தோலிக்கத் திருஅவையில் புனிதர் என்ற நிலை, மகிமைக்குரிய ஒன்றாக கருதப்படுகிறது. திருஅவையில் புனிதர்களாவதற்கு, யாருக்கும் உயர்படிப்போ, பதவியோ, பட்டமோ, பாலினமோ, செல்வமோ, செல்வாக்கோ எதுவுமே தேவையில்லை.

மேலும், புனிதர்களாக அறிவிக்கப்பட்டுள்ள அனைவருமே, பிறப்பிலேயே புனிதர்களாகப் பிறக்கவில்லை. அரசர்கள், பேரரசர்கள், மாற்றுத்திறனாளிகள், ஏழைகள், செல்வந்தர் திருத்தந்தையர், ஆயர்கள், பேராயர்கள், துறவியர், இளையோர், சிறார், பாவநிலையிலிருந்து திருந்தியவர்கள், பிற மதத்திலிருந்து கத்தோலிக்க நம்பிக்கையை தழுவியவர்கள் என அனைத்து நிலைகளிலும் புனிதர்கள் உள்ளனர். வீழ்வது பலவீனம், வீழ்ந்து கிடப்பது மதியீனம் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் இவர்கள். எனவே நாமும் புனித வாழ்வு வாழ்வோம், புனிதர்களாக மாறுவோம்.

மேரி தெரேசா...

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 24



### குறள் தரும் சிந்தனை

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்

ஒருவன் குறிப்பைக் கண்ட பின்பும் அவன் மனக்கருத்தை அறியமுடியவில்லை என்றால், உறுப்புகளுள் சிறந்த கண்களால் என்ன நன்மை?

## அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டிய அரச ஊழியர்கள்

பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாகவும் வேகமாகவும் நாடு மீட்சி பெற வேண்டும். அதுவே நாட்டில் வாழும் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பும் வேணவாவுமாகும். இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறும் போதுதான் மக்களின் வாழ்வில் சுபீட்சமும் விமோசனமும் ஏற்படும். இது பரவலாக உணரப்பட்டுள்ள உண்மையாகும்.

அதேநேரம் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் மக்களுக்கு சுமையாகவும் பாதிப்பாகவும் அமைவதைத் தவிர்ப்பதற்கான வேலைத்திட்டங்களும் நடவடிக்கைகளும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி அந்நிய செலாவணிப் பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றதாகும். அதனால் இந்நெருக்கடிக்கு ஒரே இரவில் தீர்வு கண்டுவிடவும் முடியாது. ஒரே நாளில் தீர்த்து வைக்கக் கூடிய நெருக்கடியும் அல்ல இது. இப்பொருளாதார நெருக்கடி ஒரு தேசிய பிரச்சினையே அன்றி வேறில்லை. அதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் தாமதமின்றி இணைந்து கொள்ளுமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

உண்மையில் பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய அழைப்பு இது. மாறாக கட்சி ரீதியாகப் பிரிந்து நின்று அரசியல் இலாபம் தேடக்கூடிய சூழல் இது அல்ல. ஒன்றுபட்டு அர்ப்பணிப்போடு உழைக்கும் போதுதான் இப்பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இதனை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அந்த வகையில் விவசாய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இந்நாட்டின் விவசாயத் துறையை வெற்றிகரமாக முன்னெடுத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். இந்த நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையில் அநுராதபுரத்திற்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் அங்கு நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போது, 'பெரும்போகத்திற்குத் தேவையான பசளையை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். அதற்கான உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. உரமானியமும் வழங்கப்படுகிறது. தேவையான பயிர்விதைகள் வழங்கப்படும். விவசாயப் பணிகளுக்கு தேவையான அளவு எரிபொருளை வழங்கும் பணி நடந்து வருகிறது. பெரும்போகத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தால் பொருளாதார அழுத்தத்தை குறைக்க முடியும்' என்று குறிப்பிட்டுள்ளதோடு, 'நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் சுமார் 09 அரச உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கு உழைக்க வேண்டும். கிராம அலுவலர் பிரிவுகளைத் தொகுதிகளாகப் பிரித்து செயற்பட வேண்டும். அவ்வாறு பாடுபட முடியாது எனக் கூறுபவர்கள் வீட்டுக்குச் செல்லலாம். எந்தவொரு வேலையிலும் ஈடுபடாதவர்களுக்கு சம்பளத்தை வழங்க முடியாது' என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த வலியுறுத்தல், எல்லா அரச ஊழியர்களும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்நாட்டில் பெரும்பாலான அரச ஊழியர்களின் செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் விமர்சனங்கள் நிலவுகின்றன. நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள தற்போதைய சூழலில் இவ்விமர்சனம் அதிகரித்தே காணப்படுகின்றது. இதற்கு சில அரச ஊழியர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக அமைந்திருக்கின்றன.

அரச ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் தமக்கு மாதாமாதம் சம்பளம் கிடைக்கின்றது என்பதால் தமது பணியிலும் பொதுப்பொறுப்புகள் தொடர்பிலும் அசிரத்தையோடு நடந்து கொள்கின்றனர். ஆனால் பொதுத் துறையில் பணியாற்றும் அரச ஊழியர்கள் மத்தியில் இவ்வாறான மனப்பான்மை இருக்கவே கூடாது. இம்மனப்பான்மையில் இருந்து அவர்கள் விலகி இருப்பது அவசியம்.

தமக்கு அளிக்கப்படும் சம்பளப் பணமானது மக்களின் வரிப்பணத்தில் திரட்டப்படுகின்றது என்பதை அரச ஊழியர்கள் மறந்து விடலாகாது. அதனால் தாம் பெறும் சம்பளத்திற்கு ஏற்ப பணியாற்றுவது அரச ஊழியர்களின் பொறுப்பாகும்.

அதன் காரணத்தினால் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்காக அரச ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும். அதுவே இன்றைய அவசியத் தேவையாக உள்ளது. இந்தப் பின்னணியில்தான் ஜனாதிபதி இவ்வாறு வலியுறுத்தி இருக்கிறார்.

ஆகவே அரச ஊழியர்கள் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெறுவதை இலக்காகக் கொண்டு பணியாற்ற வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் மறுமலர்ச்சியை பெற்றுத்தரும் சேவையாக அமையும் என்பதில் ஐயமில்லை.


editor.tkn@lakehouse.lk

# தீவிர கடலரிப்பினால் காவு கொள்ளப்படும் நிந்தவூர் பிரதேசம்!

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வந்த கடலரிப்பானது, தற்போது உக்கிர நிலையினை அடைந்துள்ளதுடன், கடற்கரையை அண்டியுள்ள கரையோரங்கள், வீதிகள், மீனவ கட்டடங்கள், அவர்களின் கிணறுகள், வாடிகள் மற்றும் தென்னை மரங்கள் என்பன சேதமடைந்துள்ளன.

கடலரிப்பு விடயத்தில் இப்பிரதேச அரசியல்வாதிகள் எவருமே கரிசனையெடுத்து இதற்கான நிரந்தரத் தீர்வினை பெற்றுத் தருவதற்கான எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லையென இப்பிரதேச மக்கள் கவலையுடன் கூறுகின்றனர். உள்ளூர் அரசியல்வாதிகளை நம்பி பயனில்லையென்பதால், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயத்தில் உடன் கவனம் செலுத்தி தங்களுக்கான நிரந்த தீர்வினைப் பெற்றுத் தர வேண்டுமென்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நிந்தவூர் 08, 09 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் கடலரிப்பினால் கொங்கிறீட் வீதிகள் சேதமடைந்துள்ளதுடன், மின்கம்பங்களும் கடல் அலையால் அள்ளுண்டு போகக் கூடிய ஆபத்து காணப்படுகின்றது.



ஒலுவில் துறைமுக நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், நிந்தவூர் பிரதேசத்தில் என்றுமே இல்லாதவாறு கடலரிப்பு அதிகரித்துள்ளது. சுனாமிக்குப் பின்னர் வீதியிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்துக்கு அப்பால் காணப்பட்ட கடல், தற்போது வீதியிலிருந்து 40 அடிக்கு வந்து விட்டதாக மீனவரான எம். எஸ். யாக்கூப் கவலை வெளியிட்டார்.

அத்துடன், ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர், நிந்தவூர் நொச்சியடி முகத்துவாரம் பிரதேசத்தினை அண்டிய 50 ஏக்கருக்கும் அதிகமான நெற்காணிகள் கடலரிப்பினால் காவு கொள்ளப்பட்டுள்ளன. அன்றிலிருந்தே இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை இப்பகுதி அரசியல்வாதிகள் எடுத்திருந்தால், இன்று பாரியளவிலான கடலரிப்பு ஏற்பட்டிருக்காது என்று இப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.



கடலரிப்பு பிரதேசத்தில் 09 கரைவலை தோணிச்சங்கங்கள் உள்ளன. 20 இற்கும் அதிகமான மாயாவலை மீன்பிடி சங்கங்களும் காணப்படுகின்றன. கடலரிப்பினால் இம்மீனவச் சங்களுக்குச் சொந்தமான 30 இற்கும் அதிகமான மீனவ வாடிகள் சேதமடைந்துள்ளன. 400 இற்கும் அதிகமான தென்னை மரங்கள் கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் மாத்திரம் 20 இற்கும் அதிகமான மீனவ வாடிகள் முற்றாக சேதமடைந்துள்ளன. கடலரிப்பினால் 800 இற்கும் அதிகமான மீனவக் குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்தினை இழந்துள்ளன. ஆனால் இக்குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

### பிரதேச அரசியல்வாதிகளை இனிமேலும் நம்புவதால் பயனில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென மக்கள் வேண்டுகோள்

கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக தற்போது அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், முதற்கட்ட வேலைகளுக்காக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தினால் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனாலும் இவை தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



கரையோரத்திலிருந்து 50 மீற்றர் தூரம் வரை கடலுக்குள் நேராக பாறாங்கற்களை இடுவதன் மூலம் மட்டுமே கடலரிப்பினைத் தடுக்க முடியும் என இப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளுக்கு நாள் இப்பகுதியில் கடலரிப்பின் தாக்கம் உக்கிரம் அடைந்து வருவதனால் கடலரிப்பைத் தடுப்பதற்கான வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென மக்கள் கூறுகின்றனர். இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளை நம்பி தாங்கள் இதுவரை ஏமாந்து போனதுடன், இவர்களால் நிலையான தீர்வொன்றினை பெற்றுத்தர முடியாமல் போனதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான தீர்வொன்றை வழங்க வேண்டுமென்று இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுலைமான் றாபி ...
நிந்தவூர் குறூப் நிருபர்)

# ஏழு மாவட்டங்களின் நகரசபைகளை மாநகர சபையாக தரமுயர்த்தியதற்காக பிரதமருக்கு மக்கள் பிரதிநிதிகள் பாராட்டு

இலங்கையின் ஏழு மாவட்டங்களின் நகர சபைகளை மாநகர சபைகளாக தரம் உயர்த்தியமை தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை, வவுனியா, மன்னார், புத்தளம், திருகோணமலை, கேகாலை, அம்பாறை ஆகிய ஏழு நகர சபைகளையும் மாநகர சபைகளாக தரம் உயர்த்தும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரென்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டமைக்காக அந்தந்த மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகள் அவருக்கு பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் அமைச்சர் விமலவீர திசாநாயக்க கூறுகையில் "வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லோயா அபிவிருத்தி திட்ட முறைமையை மையமாகக் கொண்ட அம்பாறை நகர சபையை மாநகர சபையாக இதுவரை காலமும் மாற்றுவதற்கு முடியாதிருந்த நிலையில் அதனை நிறைவேற்றிய பிரதமரை பாராட்டுகின்றேன்" எனக் குறிப்பிட்டார்.



"பலவிதமான அரசியல் அதிகாரங்களின் அழுத்தம் காரணமாக பல வருடங்களாக முயற்சி செய்தாலும் செய்ய முடியாதிருந்த அம்பாறை நகர சபையை மாநகர சபையாக மாற்றியதற்காக பிரதமர் தினேஷ் குணவர்த்தனுவுக்கு மாவட்ட மக்களின் நன்றிகள் உரித்தாகும்" என்று அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டீ.வீரசிங்க தெரிவித்தார். வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறுகையில் "வவுனியாவுக்கு மாநகர சபை அந்தஸ்தை பெற்றுக் கொடுப்பதற்காக இதுவரை காலமும் முயற்சி செய்தாலும் அதனை விரைவாக மேற்கொள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தன நடவடிக்கை எடுத்தமை பாராட்டுக்குரியது. நிர்வாக அதிகாரத்தை பன்முகப்படுத்துவதற்கு இது நல்ல சந்தர்ப்பம்" எனத் தெரிவித்தார்.









வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவரான வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (ஈ.பி.டி.பி) குலசிங்கம் திலீபன் தெரிவிக்கையில் "வவுனியா நகர சபையை மாநகர சபையாக உயர்த்துவதற்கு அரச நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மேற்கொண்ட தனிப்பட்ட அக்கறை மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பாக வவுனியா மக்கள் சார்பில் மனப்பூர்வமான நன்றியை தெரிவிக்கின்றேன்" எனக் கூறினார் .

பிரதமர் தினேஷ் குணவர்த்தன களுத்துறை நகரத்துக்கு ஏற்பட்டிருந்த வரலாற்று ரீதியான தவறை சரி செய்துள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரான களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார் .

தேயிலை, இறப்பர், தென்னை போன்ற பிரதான ஏற்றுமதி பயிர்களை உற்பத்தி செய்யும் மாவட்டமான கேகாலைக்கு மாநகர சபை அந்தஸ்து கிடைக்காதது இதுவரை காணப்பட்ட பாரிய குறைபாடாகுமெனவும் அதனை பிரதமர் தினேஷ் குணவர்த்தன நிவர்த்தி செய்துள்ளாரெனவும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நாட்டில் நீண்ட நகரமென கருதப்படும் கேகாலை நகருக்கு பல தேவைகளுக்காக தினந்தோறும் வருகை தரும் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கும் மையமாக விளங்கும் கேகாலை நகரசபைக்கு மாநகர அந்தஸ்து கிடைத்தமையானது அபிவிருத்திக்கு பெரும் உறுதுணையாக அமைவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மிகவும் சக்தி வாய்ந்த மாநகர சபை கட்டளை சட்டத்தின் கீழ் இயற்கையாகவே உள்ளூராட்சி சபைகளுக்கு விசேட சட்ட உரிமைகள் பல கிடைக்கின்றன.

அவற்றிடையே விசேட வரி வருமானம் பெறுவது போன்று சுகாதார, கல்வி, போக்குவரத்து, சமூக நலம் போன்ற பல துறைகளையும் நிர்வகிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# 'ஈழத்தில் மாட்டு வண்டி சவாரியும் தமிழர் மரபும்'

### சிட்னியில் நூல் வெளியீடு

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பிரதிபலிக்கும் மாட்டுவண்டிச் சவாரி பற்றிய நூல் சிட்னியில் சமீபத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

சிட்னியின் மூத்த தமிழ் பேச்சாளர் தனபாலசிங்கம் இந்நூலை வெளியிட்டு உரையாற்றுகையில், "ஈழத் தமிழர்களது கலாசார மரபில் மாட்டு வண்டிச் சவாரி முக்கிய இடம்பெற்றுள்ளது. ஏறு தழுவுதல் தமிழ்நாட்டின் வீர விளையாட்டு என்றால் இலங்கைத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு. திருகோணமலை ஆக்கிய இடங்களிலும் மாட்டு வண்டிச் சவாரி காலம் காலமாக தொடர்வதை நாம் அவதானிக்கலாம்" என்று குறிப்பிட்டார்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' எனும் மேற்படி நூல் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 40 வருடம் சுன்னாகத்தில் மருத்துவ சேவையாற்றியவருமான பிரபல வைத்தியர் ப. விக்கினேஸ்வராவின் நினைவு வணக்க நிகழ்வாக சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இந்நூலை ராஜன் விக்கினேஸ்வரா வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை சிட்னி பிரபல்ய மருத்துவர் மனோமோகன் பெற்றுக் கொண்டார். நூல் வெளியீட்டு நிகழ்வில் சிட்னியின் மூத்த தமிழ்ப் பேச்சாளர் தனபாலசிங்கம் ஆய்வுரையாற்றினார்.

"காளை மாடுகளை அடக்கி வெற்றி கொள்ளல் தமிழர் பண்பாட்டில் தொடர்ந்து வருகின்ற ஒரு வீர விளையாட்டு. தமிழ்நாட்டில் அது பெரும் கொண்டாட்டமாக இன்று வரை தொடர்வதை நாம் காணலாம். காளை மாடுகள் தமிழ் மரபில் முக்கிய இடம் வகித்தமையையும் ஈழத் தமிழர்களது பண்பாட்டு வெளியில் காளை மாட்டுச் சவாரி முக்கிய இடம் வகித்தமையையும் நாம் காணலாம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெருங்கடமையுமாகும். ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது. அது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது. இன்றைக்கு இந்த நூல் வெளிவருவதற்கு காரணம் மருத்துவர் விக்கினேஸ்வரா அவர்களாவார். அன்னார் வண்டிச் சவாரி மரபில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார் என்பதை சுன்னாகம் பிரதேச சவாரிப் பிரியர்கள் தந்த தகவல்கள் மூலம் அறிய முடிகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# கிழக்கின் குரல்



## உளநலக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த விஷேட திட்டம்





**ஏறாவூர் குறூப் நிருபர்**

உள நல குறைபாட்டினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் புனர்வாழ்வு சிகிச்சை பெற்றுவருவோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த விசேட திட்டமொன்று கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக கர்ப்பிணித்தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான சத்துமா தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவடிவேம்பு உள நல புனர்வாழ்வு நிலையத்தில் இதுதொடர்பான நிகழ்வு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.இதில், மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

டாக்டர் சுசிகலா பரமகுருநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி. சுகுணன், உள நல வைத்தியதிகாரி ரீ. கடம்பநாதன், டாக்டர் விஜீகே. பிரான்ஸிஸ், தாய்,சேய் நல வைத்தியர் எம். அச்சுதன், டாக்டர் அனஸ்லி, டாக்டர் டேன் சௌந்தரராஜன், பிரதேச சுகாதார வைத்தியதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் பிரசன்னமாயிருந்தனர்.

பல்வேறு காரணங்களினால் உள ரீதியில் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு சிகிச்சை நடவடிக்கைகளுக்காக நிலையங்களில் தங்கியுள்ளவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வின்போது கர்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கு சத்து மா பொதிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கத்தினால் திரிபோஷா சத்து மா வழங்கல் இடைநிறுத்தப் பட்டுள்ளதையடுத்து கர்பிணித்தாய்மார் மற்றும் குழந்தைகளின் போஷாக்கு வீதம் குறைவடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனைக்கருத்திற்கொண்டு சிவப்பரிசி, உழுந்து, கச்சான், கடலை மற்றும் பயறு ஆகிய தானியங்களைக்கொண்டு இச்சத்து மா தயாரிக்கப்படுகிறது. திரிபோஷா மா வழங்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்படும்வரை இத்திட்டம் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெரோயின் பாவனை, விற்பனையை தடுக்க பொலிஸார் விஷேட ரோந்து

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஹொரோயினுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலால்,உஷாரடைந்த உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான குழுவினர், வெள்ளப்பாதுகாப்பு வீதியில் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 42 மில்லி கிராம் ஹொரோயினையும் கைப்பற்றினர்.

இதேவேளை மத்திய வீதி,புதுப்பள்ளி வீதி ஆகிய பிரதேசங்களிலும் இருவர் கைது செய்யப்பட்டனர். ஒருவரிடம் 40 மில்லிகிராம் ஹொரோயினும், மற்ற நபரிடமிருந்து 40 மில்லி கிராம் ஹொரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் செப்டம்பர் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னக் கதிர்காமம் என்றழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவ கொடியேற்ற நிகழ்வுகள் நேற்று முன்தினமிரவு (21) இடம்பெற்றது. போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி தலைமையில் இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ.நிதாகரன்)

## விழிப்புணர்வு காட்சிப்பலகை பொலிஸ் அதிகாரியால் திறந்து வைப்பு

**ஒலுவில் விஷேட நிருபர்**

"தேசத்தின் வேர்களான இளைஞர்கள் தீவிரவாதமற்ற நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு காட்சிப்பலகை அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் வீ.எஸ்.எம். சதாத் இதைத் திறந்து வைத்தார்.

இங்கு உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது, நிலையான அபிவிருத்திக்கும் சமூக உறவை கட்டியெழுப்புவதற்கும் நாட்டு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

தற்போது நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது. இந்நிலையில் அதிலிருந்து மீளுவதற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தற்போது எமது பிராந்தியத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன. இதனை ஒழிப்பதற்கு இளைஞர்களும் சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்களும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.



இன முரண்பாடு இன்று இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் காணப்படுகின்றது. இதனை பேச்சுவார்த்தை மூலமும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடனும் செயற்பட்டு சமூக கலாசாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

சகல சமூகங்களும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையுமே விரும்புகின்றன. ஒவ்வொரு சமூகத்தவர்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்த்திருக்கின்ற நிலையான சமாதானத்தை அடைய முடியும் என்றார்.

அம்பாறை சர்வமத குழுவின் தலைவர் ஐ.எல்.எம். ஹாஸிம் தலைமையில் நடைபெற்ற இவ்பைவத்தில்,

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எஸ்.வி. விஜயதுங்க,சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் சர்வமத குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## செல்வங்களை செலவு செய்து இறை திருப்தியை பெறுவதே பொதுப்பணியாகும்

### அவசரகால நிவாரணப்பணி கூட்டத்தில் உரை

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

அக்கரைப்பற்று ஸகாத் நிதியம், ஜெம்மியத்துல் உலமா, அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம், மாநகர சபை, பிரதேச சபை, சமூக நிறுவனங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் ஒன்றிணைந்து செயல்படுத்தி வரும் “அவசரகால நிவாரணப்பணி” தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அக்கரைப்பற்று "மெங்கோ கார்டன்" மண்டபத்தில் ஸகாத் நிதிய தலைவர் அஸ்ஷேய்க் ஏ.எம் ரஹ்மத்துல்லாஹ் (வலயக் கல்விப்பணிப்பாளர்) தலைமையில் நடைபெற்றது. அக்கரைப்பற்று மாநகர முதல்வர், அக்கரைப்பற்று பிரதேச சபைத் தலைவர், பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், தனவந்தர்கள், வர்த்தக பிரமுகர்கள், நெல், மர ஆலைகள் உரிமையாளர்கள், கல்வியியலாளர்கள், இளைஞர் அமைப்பின் பிரதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஸகாத் நிதியத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் அரபுக்கல்லூரியின் அதிபரும் ஜெம்மியதுல் உலமா சபையின் தலைவருமான மௌலவி எம்.எம்.கலாமுல்லாஹ் (ரஸாதி)



இதில் விஷேட உரையாற்றினார். அவர் தனதுரையில் கூறியதாவது,“ எமது செல்வங்கள் மற்றும் வரப்பிரசாரங்கள் அனைத்தும் “அல்லாஹுத்தஆலா நம்மீது கொண்டுள்ள அன்பு, இரக்கத்தால் வழங்கப்பட்டவையாகும். இவற்றை இல்லாதோருக்கு வழங்குவதை அவன் பெரிதும் விரும்புகின்றான். ஆகையால் நாம் எமக்கு கிடைக்கும் செல்வங்களில் முடியுமானவரை இல்லாதோருக்கு வாரி வழங்க முன் வரவேண்டும். அப்போதுதான் அல்லாஹ் சந்தோசப்படுகின்றான். மேலும். எமது பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்கின்றான்.

எமது இந்தப்பணிக்கு சகலரும் உதவுகின்றனர். மாணவர்கள், சிறுவர்கள் கூட உண்டியல்கள் மூலமாகச் சேகரித்த பணத்தை வழங்கியுள்ளனர். அனர்த்தங்கள் எங்கு நடந்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் மனமுவந்து அள்ளி வழங்குவது அக்கரைப்பற்று மக்களின் சுபாவமாக உள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளம், சுனாமி, மண்சரிவு, சூறாவளி, யுத்தம்போன்ற அனர்த்தங்களின்போது அள்ளி வழங்கியமை எமது செயற்பாடுகளுக்கு நல்ல சான்றாகும்.இப்பணி தொடர வேண்டும் என்றார்.

சகாத் நிதியத்தின் தலைவர் அஷ்ஷேய்க். ரகுமத்துல்லாஹ் உரையாற்றுகையில், எம்மால் ஆரம்பிக்கப்பட்ட “அவசரகால நிவாரணப்பணி” திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவோருக்கும் நன்றிகள். சகாத் நிலைய அறிக்கயின்படி ★ இற்றை வரை மொத்தம் 73 இலட்சம் ரூபா சேர்ந்துள்ளது. தனி நபர்கள் மூலமாக ரூபா 18 இலட்சம் சேர்ந்துள்ளது. ஊர் வசூலாக ரூபா 36 இலட்சமும், பள்ளி வாசல், சிறுவர் உண்டியல்கள் மூலமாக முறையே 58 ஆயிரம் ரூபாவும் 22 ஆயிரம் ரூபாயும் கிடைத்துள்ளது.

உலமாக்கள், பாடசாலைகள், சந்தைகளிலிருந்தும் வெளிநாடுகளில் தொழில் புரிவோரிடமிருந்தும் தனி தனியாக வசூலிக்கப்பட்டுள்ளன. இது தவிர நெல் 18 மூடைகளும் ஐந்து கிலோ பொதி அரிசி 183 பேக்குகளும் பத்து கிலோ பொதி அரிசி 02 பக்கற்றுக்களும் வீடுகளில் சில்லறையாக அரிசி முன்னூறு கிலோ கிடைத்துள்ளதாகவும் இங்கு குறிப்பிட்டார்.

செயலாளர் (சகாத் நிதியம்) எம்.ஐ. எம். இல்யாஸ், செயலாளர் (ஜெம்மியதுல் உலமா) மௌலவி எம்.ஏ.ஹபீல் மற்றும் வர்த்தக பிரமுகர்களும் இங்கு உரையாற்றினர்.

## அரபிக்கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட நூலகம் சம்பிராதயபூர்வமாக திறப்பு

**ஏறாவூர் நிருபர் நாஸர்**



மட்டக்களப்பு ஏறாவூர் அந்நிழாமிய்யதுல் மஹ்ஃபிய்யா அரபிக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வாசிகசாலை சம்பிரதாயபூர்வமாக திறக்கப்பட்டது.

ஸதகா அறக்கட்டளை நிதியத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இவ்வாசிகசாலைத் திறப்புவிழா நிகழ்வில், நிதியத்தின் பிராந்திய தலைவர் அபுல்ஹஸன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மௌலவி ஏ இப்றாஹிம் (றப்பானி) தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. மௌலவிமார்களான யுஎல். நவாஸ் (உஸ்மானி) மற்றும் மௌலவி எம். முபாறக் (பைஸானி,மஹ்தி) உள்ளிட்ட பலர் இதில், கலந்துகொண்டனர்.

கடந்த சுமார் ஆறு வருடங்களாக இயங்கிவரும் இக்கல்லூரியில் வாசிகசாலை அமைக்கப்படாதிருந்தமை பெரும் குறைபாடாகக்காணப்பட்டது.

இவ்வாசிகசாலைக்கு அறபு, தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில உசாத்துணை நூல்கள் மற்றும் தளபாடமும் வழங்கப்பட்டுள்ளன.



அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அல்பாயிஸா பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்,ஏ,ஏ,இஸ்ஸடீன்,அண்மையில் புத்தகப்பூங்கா நிறுவுநரும் இலக்கியப்புரவலருமான ஹாஸிம் உமரை கொழும்பில் சந்தித்தார்.நட்பு ரீதியாக இடம்பெற்ற இச்சந்திப்பில் புத்தகம் ஒன்றை அன்பளிப்புச் செய்த புரவலர்,பாடசாலை நூலகத்துக்கு சில நூல்களை அன்பளிப்பதாகவும் உறுதியளித்தார். அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

## சமய பாடத்தில் அடைவுமட்டத்தை அதிகரிக்க ஆசிரியர்கள் முயற்சி

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

சமயபாட அடைவுமட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் விசேட வேலைத்திட்டங்கள், கல்முனை வலய பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்முனை வலய பாடசாலைகளில் கடந்த இரு வருடங்களில் சமயபாட அடைவுமட்டம் மிகவும் குறைந்தளவில் காணப்பட்டது. இந்நிலைமையை மாற்றுவதற்கே, இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.கல்முனை அல்ஹிலால் வித்தியாலயத்தில், ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிராஜூதீன் வகுப்பறை மாதிரி கற்பித்தலில் ஈடுபட்டு மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு முயற்சித்து வருகிறார்.

## அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றிவரும் அரச அலுவலர்களுக்கான அரசியல் யாப்பு திருத்தம் மற்றும் மனித உரிமைகள்

தொடர்பான முழுநாள் விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை (20) திகதி கல்லடி கிரீன் கார்டன் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இலங்கை சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத பேரவையினால் நாடாத்தப்பட்ட இந்நிகழ்வு, சர்வமத பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் என்.பாசுதேவன், சர்வமத பேரவையின் மாவட்ட உதவி இணைப்பாளர் எச்.ஏ.எம். ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்விற்கு வளவாளராக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான பீடத்திற்கான சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ரமேஷ் இராமசாமி கலந்துகொண்டு அரசியல் யாப்பு (19 22) திருத்தம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கமளித்திருந்தார்.




# யாழ் பல்கலைக்கழக ஆலய சங்காபிஷேகம்



**யாழ். விசேட நிருபர்**

யாழ். பல்கலைக்கழக அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்றைய தினம் செவ்வாய்க் கிழமை காலை 6 மணியிலிருந்து சங்காபிஷேகத்துடன் இடம்பெற வுள்ளது.

இதன் போது ஆலய வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மற்றும் சேர்.பொன்.இராமநாதன் உருவச் சிலைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

பரமேஸ்வரா கல்லூரி இயக்குனர் சபையின் ஏற்பாட்டில் வேதாகம பாடசாலை ஆரம்ப நிகழ்வு மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன.

### இந்து பௌத்த கலாசார பேரவையினால்

# இளைஞர் யுவதிகளுக்கு இலவச ஆங்கில வகுப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**



இந்து பௌத்த கலாசார பேரவையினால் வடக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு இலவச அடிப்படை ஆங்கில மொழியை கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கற்பித்தல் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவதுடன் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள விரும்பும் இளைஞர் யுவதிகளுக்கு விசேட ஆங்கில வகுப்புகளும் இடம்பெறவுள்ளன.இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இவ் ஆங்கில வகுப்பானது 6 மாத காலத்தை கொண்ட வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் வகுப்புகள் நடைபெறும்.

18 தொடக்கம் 45 வயதிற்கு இடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். கற்கை நிறையை பூர்த்தி செய்பவர்களுக்கு பரீட்சைகள் நடாத்தி சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு 0212232072,0779019814 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூரில் கஜவள்ளி மஹாவள்ளி உற்சவம்



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 21ம் திருவிழாவான நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை கஜவள்ளி மஹாவள்ளி உற்சவம் இடம்பெற்றது. காலை நடைபெற்ற வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து மகர வாகனத்தில் கஜவல்லி மஹாவள்ளி எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். அதேவேளை இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை மாம்பழத்திருவிழாவும், மாலை ஒருமுக திருவிழாவும் இடம்பெறவுள்ளது. அத்துடன் நாளை புதன்கிழமை காலை 7மணிக்கு சித்திரத்தேர் வெள்ளோட்டமும், மாலை சப்பரத்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. யாழ்.விசேட நிருபர்




வடக்குகிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் சிறுபான்மையின மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் 100நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 22வது நாள் கவனயீர்ப்பு நிகழ்வுகள் நேற்று திங்கட் கிழமை குருநகர் இறங்குதுறைப் பகுதியில் இடம்பெற்றது. (சாவகச்சேரி விஷேட நிருபர்)

### சோளப் பயிர்ச் செய்கை:

# உர மானியத்துக்கான பதிவுகள் ஆரம்பம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த பெரும் போகத்தில் சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான உர மானியம் வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடாளவிய ரீதியில் சோளப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த 2022, 2023 பெரும்போகத்தின் போது சோளப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் யூரியா உரம் வழங்குவதற்கான பதிவு நடவடிக்கைகள் கடந்த 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக ஆணையாளர் நாயகத்தினால் பிரதி ஆணையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

### சிறுபோக நெல் அறுவடைக்கு

# எரிபொருள் பெற்றுத்தருமாறு கோரி கிளிநொச்சியில் விவசாயிகள் மகஜர்

**(பரந்தன் குறூப் நிருபர்)**



சிறுபோக அறுவடைக்கு டீசல் பெற்றுத்தருமாறு கிளிநொச்சியில் விவசாயிகள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். நேற்று காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் கையளிக்க சென்ற விவசாயிகள், இவ்வாறு கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு, அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், அறுவடைக்கு தேவையான டீசலை விரைவாக பெற்றுத்தருமாறு தெரிவித்தே விவசாயிகள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் விவசாயிகளுடன் கலந்துரையாடி விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட தரப்புடன் பேசி விரைவான நடவடிக்கை எடுப்பதாக விவசாயிகளிடம் தெரிவித்தார்.

இதன்போது, அறுவடைக்கு தேவையான டீசல் கிடைக்காதவிடத்து, தாம் காலபோக செய்கையை மேற்கொள்ளப்போவதில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் சிவமோகன் ,

சிறுபோக அறுவடைக்கு தேவையான டீசல் கிடைக்கவில்லை. கடந்த சில நாட்களாக மாவட்டத்திற்கு டீசல் கிடைக்கப் பெறவில்லை. விவசாய செய்கைகளை கால்நடைகள் சேதமாக்கும் அபாயம் காணப்படுகின்றது. அறுவடையை விரைவாக மேற்கொள்ள தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுபோக செய்கையை முழுமையாக நிறைவு செய்ய முடியாது எமது விவசாயிகள், காலபோக செய்கை தொடர்பில் பரிசீலிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

# குழந்தைகள் உட்பட மேலும் 8 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

**மன்னார் குறூப், யாழ். விசேட நிருபர்கள்**



இலங்கையில் இருந்து மேலும் 08 பேர் கடல் வழியாக நேற்றைய தினம் திங்கட்கிழமை தமிழகம் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையை சேர்ந்த 3 ஆண்கள் , 2 பெண்கள் மற்றும் 3 சிறுவர்களாக மூன்று குடும்பங்களை சேர்ந்த 08 பேரே படகொன்றில் தமிழகம் தனுஷ்கோடி பகுதியை சென்றடைந்து தஞ்சம் கோரியுள்ளனர்.

அவர்களை மீட்ட கடலோர பாதுகாப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் தமிழக செய்திகள் தெரிவித்திருப்பாதாவது,

இலங்கையின் வடபகுதியை சேர்ந்த கார்த்திக், ரத்தினம்,கீதா குமாரி அவர்களது. குழந்தைகள் என ஒரே குடும்பத்தை சேர்ந்த ஏழு பேரும் மன்னாரை சேர்ந்த சாகுல் ஹமீது என்பவருமாக மொத்தம் 8 பேர் மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டு நேற்று திங்கட்கிழமை(22) அதிகாலை தனுஷ்கோடி பாலம் அருகே வந்திறங்கியுள்ளனர்.

தனுஷ்கோடி வந்த இலங்கை தமிழர்கள் தாங்களாக ஆட்டோவில் ஏறி மண்டபம் மரைன் காவல் நிலையத்திற்கு சென்றுள்ளனர். இதனையடுத்து மண்டபம் மரைன் போலீசார் நடத்திய விசாரணையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக வாழ வழியின்றி உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாகவும், தாங்கள் அனைவரும் 1990 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போரின் காரணமாக தமிழகத்திற்கு அகதியாக வந்து குடியாத்தம் முகாமில் பதிவில் தங்கி இருந்து மீண்டும் இலங்கைக்கு சென்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மத்திய,மாநில உளவுத்துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பிறகு 8 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப் பட உள்ளனர்.

மேலும் தமிழகத்திற்கு வந்த இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 149 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

**கோவில் குளம் குறூப் நிருபர்**

வவுனியாவில் அண்மைக்காலமாக பெய்த மழையினால் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதை அடுத்து பொதுமக்கள் இருப்பிடங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் அனைத்தும் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

நேற்றைய தினம் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்கள், வங்கிகள் விருந்தினர் விடுதிகள் உணவகங்கள் பொதுமக்கள் இருப்பிடங்கள் என்பன பிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கு குடம்பிகள் காணப்படும் மற்றும் நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் தமது இருப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், அரச நிறுவனங்கள் என்பனவற்றை துப்பரவு செய்து டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வரும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்குமாறும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டால் சிவப்பு எச்சரிக்கை ஒட்டப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### யாழ்.மாவட்ட

# பெரும்போகத்துக்கான உர விநியோகம் ஆரம்பம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் மாவட்ட பெரும்போகத்துக்கு தேவையான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. யாழ். மாவட்டத்தில் சிறுபோக செய்கை முன்னெடுக்கப்படாத நிலையில் பெரும்போக செய்கை ஆரம்பமாகவுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம் எம். எல். அபேரத்ன தெரிவித்துள்ளார். அத்துடன், சிறுபோகத்தில் நெல் செய்கைக்குத் தேவையான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள், தற்போது பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



சர்வதேச புகைப்படத் தினத்தை முன்னிட்டு புகைப்படக் கலைஞரும் அதிபருமான அ. பங்கையற்செல்வனின் அழகிய வண்ணப் புகைப்படங்கள் தாங்கிய 'நிழல்கள் சொல்லும் கதைகள்' (ஒளி ஓவியம் காட்டும் திசை) எனும் நூல் கருத்தமர்வும் நூல் வெளியீடும் கடந்த வெள்ளிக் கிழமை மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் காவேரி கலா மன்றத்தின் இயக்குனர் வண. யோசுவா அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது..

# நகர்வலம்



# 2030 வரை ரணிலே நாட்டில் ஜனாதிபதி

## அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை



எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிப்பார். அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

எனவே சகல கட்சிகளும் எவ்வித பேதமும் இன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ரணில் விக்கிரமசிங்கவே எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகவே பதவி வகிப்பார். அதில் எந்த மாற்று கருத்தும் கிடையாது. ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிச் சென்று உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரையில் வெற்றி பெற்றதில்லை.

அதே போன்று எந்தவொரு அரசியல் தலைவரும் வெற்றியடைந்ததில்லை. ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பில் பேசுவது பிரயோசனமற்றது. ஏனைய கட்சிகளுக்கும் அதே நிலைமையே ஏற்படும்.

நாட்டில் பல்வேறு பௌத்த மகா சங்கங்கள் காணப்படுகின்ற போதிலும், மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்கள் தொடர்பிலேயே அனைவரும் பேசுகின்றனர். அதே போன்றுதான் இலங்கையிலும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகியவை மாத்திரமே ஸ்திரமான கட்சிகளாகவுள்ளன.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தனித்துச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பயணிக்க முடியும்.

எவ்வித பேதங்களும் இன்றி அனைவரையும் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

இன, மத, மொழி பேதமின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இந்நாட்டின் பிரஜையாவார். அவரது திறமையற்ற நிர்வாகம் மற்றும் பலவீனத்தின் காரணமாகவே நாடு இந்த நிலைமையை அடைந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் நாட்டின் பிரஜை என்ற ரீதியில் அவருக்கு இங்கு வசிப்பதற்கான உரிமை காணப்படுகிறது. அதற்கமைய நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு அனைத்து பிரஜைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு காணப்படுகிறது.

அரசியலமைப்பிற்கமைய பிரஜைகள் உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அரச தலைவர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். அது கோட்டாபய ராஜபக்ஷவாகவும் இருக்கலாம். மஹிந்த ராஜபக்ஷவாகவும் இருக்கலாம். வேறு பிரஜைகளாகவும் இருக்கலாம் என்றார்.



மொரட்டுவ மாநகர சபையின் ஆகஸ்ட் மாத அமர்வு மாநகர முதல்வர் சமன்லால் பெர்னாண்டோ தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது. மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி தொடர்பிலான பல்வேறு தீர்மானங்கள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன. (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# அரச அலுவலகங்களில் தோட்ட பயிர்ச் செய்கை

திறப்பனை தினகரன் நிருபர்



கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உணவு நெருக்கடிக்கு தீர்வாக தோட்டம் அமைக்கும் வேலை திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் கீழ் அரச அலுவலகங்களில் தோட்ட பயிர் உற்பத்தி பணியும் சிறப்பாக இடம் பெற்றிருந்தன.

அநுராதபுர மாவட்ட செயலாளர் திரு. ஜனக ஜயசுந்தர அரச அலுவலகங்களில் பயிர் செய்யப்பட்ட தோட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து பார்க்கும் கள விஜயம் ஒன்றை அண்மையில் மேற் கொண்டு அநுராதபுர மாவட்ட செயலகத்தின் ஊடாக செய்கை பண்ணப்பட்ட மரக்கறி தோட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதை நேரில் சென்று அவதானித்தார்.

மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி லலிதா தேனுவரவின் தொழில்நுட்ப ஆலோசனையின் அடிப்படையில் தோட்ட பயிர் உற்பத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

இவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் மிகுந்த அக்கறையுடன் பயிர் செய்கை இடம் பெற்றிருந்தமை சிறப்புக்குரியது என பலராலும் பாராட்டப்பட்ட இந்தப் பயிர்ச் செய்கையால், நல்ல சுற்றுப்புறச் சூழல், அழகு உருவாகுவதோடு, குப்பைகளை முறையாக அகற்றுதல், தேவையற்ற பொருட்களை அகற்றுதல், காணிகளை அதிக பட்சமாக பயன்படுத்துதல், உச்ச பயனை பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

சூரியவெள பிரதேச விவசாயிகளுக்கு

## தடையின்றி நெல் அறுவடை மேற்கொள்ள டீசல் வழங்கல்

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்.

அரசாங்கத்தின் தலையீட்டால் சூரியவெள பிரதேச விவசாயிகளுக்கு தடையின்றி நெல் அறுவடையை மேற்கொள்வதற்கு டீசலினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலதாமதமின்றி அறுவடையினை மேற்கொள்வதற்காக சூரியவெள பிரதேச செயலகம், மஹவெலி அதிகார சபை மற்றும் சூரியவெள பொலிஸார் ஆகியோர் ஒன்றிணைந்து இதுவிடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் சிறுபோக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அறுவடைக்கு தேவையான ளவு டீசலினை விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக சூரியவெள பிரதேச செயலகப் பிரிவில் சிறுபோகத்தில் நெல் செய்கையில் ஈடுபட்டுள்ள சகல விவசாயிகளுக்கும் இவ்வாறு தடையின்றி டீசல் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முஹம்மட் இர்பான் வழங்கும் பொன்மாலை பொழுது

**27ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு**

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தென்றல் எப்.எம் அறிவிப்பாளரும் பொன்மாலை பொழுது இசை நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளருமான முஹம்மட் இர்பான் வழங்கும் பொன்மாலை பொழுது இசை நிகழ்ச்சி இம்மாதம் 27ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நம் நாட்டின் பிரபல இசை குழுவான வி. செந்தூரனின் ஏசியன்ஸ் இசைக்குழுவின் இசையில் நடைபெறவுள்ளது.

நம் நாட்டின் பிரபல பாடகர்களான கலைக்கமல், சுலோசனா, சமீரா ஹசன், சுலக்சன், அனுன், அபிலாஷினி, சுவாரணியா, பிரஷாந்தினி ஆகியோரும் பாடவுள்ளனர்.


## கொழும்பில் நடைபெறும் மேல்மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

### அறிவித்தல்

மல்வான, வல்கம, BEPZ, 15ஆம் இலக்க காணித்துண்டத்தைச் சேர்ந்த லுமியர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டின் விடயத்தில்.

அத்துடன்

வழக்கில : CHC/32/2022/CO
தன்மை : ஒடுக்குதல்

லுமியர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டின் அலுவல்களை நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கு, 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 534ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 270 (உ) என்னும் பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் விடயத்தில்.

செபெக் இன்டர்நஷனல் பிறைவேட் லிமிடெட்,
180B, பென்கூலன் தெரு,
#12-05, த பென்கூலன்,
சிங்கப்பூர் (189648).

மனுதாரர்.

(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) இலங்கையிலுள்ள கொழும்பில் நடைபெறும் மேல்மாகாணத்தின் வர்த்தக மேல்நீதிமன்றத்தினால் மேலே பெயர்குறிப்பிடப்பட்ட கம்பெனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, மேற்கூறப்பட்ட மனுதாரரின் சார்பில் சட்டத்தரணி ரசிக்கா வெல்லப்பிலி அவர்களினால் 2022, யூலை 28 ஆந்நாளன்று சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டதென்றும், சொல்லப்பட்ட மனு, 2022, ஒக்டோபர் 10 ஆந்நாளன்று நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. சொல்லப்பட்ட மனுமீது கட்டளையொன்று ஆக்கப்படுவதனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பெனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர், அந்நோக்கத்துக்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம் அத்துடன் மனுவின் பிரதியொன்று அதனைத் தேவைப்படுத்துகின்ற சொல்லப்பட்ட கம்பெனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு, அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக்கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.

**ரசிக்கா வெல்லப்பிலி**
**மனுதாரருக்கான சட்டத்தரணி**
**இல. 25/1/B, பெல்மொன்ட் தெரு,**
**கொழும்பு 12.**

குறிப்பு:
சொல்லப்பட்ட மனுவின் கேட்பின்போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப்பற்றிய எழுத்திலான அறிவித்தலை சட்டத்தரணி ரசிக்கா வெல்லப்பிலி அவர்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும் முகவரியையும், அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால், அல்லது அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும். அத்துடன் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரை, 2022, ஒக்டோபர் 10 ஆந்நாளன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் சென்றடையுமாறு அது சேர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது அஞ்சலிடப்படின், அந்நேரத்துக்கு முன்னர் அவரைச் சென்றடையக்கூடியவகையில் போதிய நேரகாலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.



## கேள்விகோரல் அறிவித்தல்

**குண்டசாலை பிரதேச சபை — மெனிக்ஹின்ன குண்டசாலைப் பிரதேச சபைக்கு உரித்தான ரஜபொள வளாகத்தின் பூஞ்செடிகள் நாற்று மேடையைக் குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி கோரல்**

குண்டசாலைப் பிரதேச சபைக்கு உரித்தான ரஜபொள வளாகத்தில் அமைந்துள்ள பூஞ்செடிகள் நாற்றுமேடையை 05 வருடங்களிற்குக் குத்தகைக்கு விடுவதற்காக இச்சபையானது, தீர்மானித்துள்ளபடியால், குத்தகை அடிப்படையில் இதனைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் ரூபா 1500.00 இற்கான தொகையைச் செலுத்தி கேள்வி விண்ணப்பப்படிவமொன்றை பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், அதற்கு மேலதிகமாக, மீளளிக்கப்படும் ரூபா 5000.00 இற்கான தொகையை வைப்புச் செய்து கேள்விப் படிவங்களைப் பூரணப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

2022.08.24 முதல் 2022.09.12 வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலப்பகுதியில் இதற்கான கேள்வி விண்ணப்பப்படிவங்ளைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2022.09.13 அன்று மு.ப.10.00 இற்கு முன்னர், தலைவர், குண்டசாலைப் பிரதேச சபை என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

விலைமனுத்திறத்தல் 2022.09.14 அன்று மு.ப.10.30 இற்கு மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். கேள்விகளைத் தாங்கிவரும் தபாலுறைகளின் இடதுபக்க மேல் மூலையில், "குண்டசாலை பிரதேச சபை ரஜபொள வளாகத்திலுள்ள பூஞ்செடிகள் நாற்றுமேடையைக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இக்கேள்விகளை ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் குண்டசாலை பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகுமென்பதனை மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

(இவ்வளாகத்தின் மாதாந்த ஆகக்குறைந்த குத்தகைத் தொகையானது ரூபா 7500.00 என்பதுடன் அதன் பிரகாரம் உங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கவும்.)

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதேச சபையின் தொலைபேசி இலக்கம் 081-2375624 மூலம் அறிந்து கொள்ளலாம்.

**பி.எச்.எஸ்.ஆர்.அக்மீமன**
**தலைவர்,**
**குண்டசாலை பிரதேச சபை,**
**மெனிக்ஹின்ன**



மாநகரசபை - குருணாகல்

## பெறுகைக்கான அறிவித்தல்

**குருநாகல் மாநகரசபைக்கு சொந்தமான புதிய மத்திய சந்தை கட்டுமானத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் 24 வீட்டுப் பிரிவுகளை கொண்டுள்ள செயற்திட்டற்திற்கு கொண்டமினியம் முறை பற்றிய அறிவு கொண்ட சட்ட அதிகாரி ஒருவரை நியமனம் செய்வதற்கான விலைமனுக்கோரல்.**

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்ட அதிகாரியொருவரை நியமனம் செய்வதற்காக தேசிய போட்டிமுறையிலான மனுக்கோரலுக்கு குருணாகல் மாநகரசபையின் நகராட்சி மன்றத்தின் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வார நாட்களில் அலுவலக நேரங்களில் கொள்முதலுக்கான ஆவணங்கள் ஆய்வு செய்யப்படும். மேலே குறிப்பிட்டுள்ள மனுக்கோரலுக்கான ஆவணங்களை **2022.08.23 ஆம் திகதி முதல் 2022.09.13 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை அலுவலக நேரங்களில் குருணாகல் மாநகரசபையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். **2022.09.14 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **நகராட்சி மன்றக் குழுவின் கூட்டம் நடைபெறும் அரங்கில்** மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம். மனு ஆவணங்களுடன் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

- மனுப் பாதுகாப்பு ரூ.10,000.00 (மீள்ச்செலுத்தப்படும் கட்டணம்)
- மனு ஆவணக்கட்டணம் 12% VAT வரி உட்பட ரூ. 2,240.00

**மேலதிக விபரங்களுக்கு**

தொலைபேசி : 037-4941869
மின்னஞ்சல் : ginumviyadam@gmail.com
தொலைநகல் : 037 2228136

நகராட்சி ஆணையாளர்
மாநகர சபை,
குருநாகல்.
2022/08/23

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு

WP CBH-3893 ஹொண்டா சிவிக் 2017 கார் அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 4542958. 048142

### 118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

WP KN-3155 Kia, sportage 2011 அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 4542958. 048144

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP YA-9235 பஜாஜ் 2010, NW YE-5600 பஜாஜ் 2010 முச்சக்கர வண்டி அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711 210810. 048143

---

## வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

கல்வி அமைச்சு

# விலைமனுக்கோரல்

## பாதுகாப்பு சேவை வழங்கல் - 2022/2023

01. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்திற்காக தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| டென்டர் இலக்கம் | வேலை விபரம் | மனு பாதுகாப்பு (ரு) | மீளச்செலுத்தப்படும் தொகை (ரு) |
|---|---|---|---|
| 22/UVT/SUP/NCB/SS/01 | பாதுகாப்பு சேவை வழங்குதல் | 150,000.00 | 2,500.00 |

02. மனு கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேற்கொள்ளப்படும்.

03. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக **2022.08.23 ஆம் திகதி முதல் 2022.09.12 வரை மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.2.00 மணி** வரை (வாரத்தின் வேலை நாட்களில்) தொலைபேசி இலக்கம் : 011-2630733 ஊடாக பிரதி நிதியாளர் (வழங்கல்), வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இல.100, கந்தவல, இரத்மலானை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

04. தகுதியான மனுதாரர்கள் மனு ஆவணங்களை **2022.08.23 ஆம் திகதி முதல் 2022.09.12 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப.02.00** மணிவரை மீள் செலுத்தப்படாத கட்டணத்தை (ஏதேனும் இலங்கை வங்கி கிளையில் வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், கணக்கு இலக்கம் 0070308457, இலங்கை வங்கி, இரத்மலானை கிளை) செலுத்துவதன் மூலம் மற்றும் வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இரத்மலானை, உதவி நிதி அலுவலருக்கு (வழங்கல்) கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

05. மனு தொடர்பான கூட்டம் **2022.08.31** ஆம் திகதி வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவில் **மு.ப.10.00** மணிக்கு இடம்பெறும்.

06. மனு ஆவணங்களை அசல் **பிரதிகளுடன்** (அசல் மற்றும் நகல் பிரதி) **2022.09.13** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னர் தலைவர், வழங்கல் குழு, வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இல-100, கந்தவல, இரத்மலானை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனு பெட்டியில் இட முடியும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் இலக்கம், ஒப்பந்தத்தின் விபரம், மனுக்கள் திறக்கப்படும் திகதி என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும். காலதாமதமாக கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. மனுக்கோரலானது **2022.09.13 ஆம் திகதி பி.ப.2.00** மணியுடன் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். அத்தருணத்தில் மனுதாரர்கள் அல்லது மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் (உரிமம் வழங்கப்பட்ட கடிதத்துடன்) கலந்து கொள்ள முடியும்.

08. ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஒரு மனுவை அல்லது சில மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரிக்கும் உரிமையினை பல்கலைக்கழக வழங்கல் குழு கொண்டுள்ளது.

**தலைவர்**
**திணைக்களத்தின் வழங்கல் குழு,**
**வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்,**
**இல.100, கந்தவல, இரத்மலானை.**

**தொலைபேசி : 011 2630733**
**தொலைநகல் : 0112630738**
**இணையம் : www.uovt.ac.lk**
**2022.08.23**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## பெயர் மாற்றம்

மட்டக்களப்பு கொக்குவில் 2ம் குறுக்கு எனும் முகவரியைச் சேர்ந்த அருள்துரை அருள்ராணி ஆகிய நான் மற்றும் கமலநாதன் காயத்திரி, கமலநாதன் நவிராஜ் ஆகியோர் 20.12.2016 அன்று புனித இஸ்லாம் மார்க்கத்தை சுயவிருப்பின் பேரில் தழுவி அருள்துரை அருள்ராணி - அருள்துரை கதீஜா, கமலநாதன் காயத்திரி - கமலநாதன் ஹபீபா, கமலநாதன் நவிராஜ் - கமலநாதன் நபீல் என பெயர்களை மாற்றிக் கொண்டோம். என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக்குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**அருள்துரை கதீஜா**
**கமலநாதன் ஹபீபா**
**கமலநாதன் நபீல்**

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல் சம்பந்தமான அறிவித்தல்

புசல்லாவையில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு மொஹிதீன் பிச்சை ஒமர் ஹதாப் அவர்களினால் 16.12.2012ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5306ம் இலக்க அற்றோணி தத்துவத்தின் பிரகாரம் இல.371, தெனியகொட, கஹபத்தன, பூண்டுலோயா விலாசத்தில் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இல.692860080V கொண்ட அப்துல் கரீம் மொஹம்மது ஆரிஸ் ஆகிய என்னால், என் சார்பாக செயற்படுவதற்காக இல.371, தெனியகொட, கஹபத்தன, பூண்டுலோயா விலாசத்தில் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இல.766800149V கொண்ட ரொஷான் பீபி என்பவருக்கு வழங்கியிலிருந்த அற்றோணி பத்திரத்தை இன்று முதல் இரத்துச் செய்கின்றேன் என்பதை இலங்கை ஜனநாயக குடியரசிற்கும், மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

**அப்துல் கரீம் மொஹம்மது ஆரிஸ்**
**இல.371, தெனியகொட, கஹபத்தன, பூண்டுலோயா**

---

## பெயர் மாற்றம்

கிராம உத்தியோகத்தர் பிரிவு: மட்டக்குளி

பிரதேச செயலாளர் அலுவலகம்: கொழும்பு

கொழும்பு-15, ஹேனமுல்ல, இல. 233/243 என்ற முகவரியைச் சேர்ந்த ஜோசவ் ஞானமணி ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை யூசுப் ஜெஸ்மின் என மாற்றம் செய்துள்ளேன் எனவும் இனிமேல் புதிய பெயரையே பாவிப்பதாகவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிக்கும் இலங்கை மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**யூசுப் ஜெஸ்மின்**

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொச்சிக்கடை, மனவேரிய, இல. 52/4 ஐச் சேர்ந்த வர்ணகுலசூரிய நெலும் லக்ஷிகா விலஷானி பொ்னான்டோ ஆகிய என்னால் கொச்சிக்கடை, மனவேரிய, இல. 52/4ஐச் சேர்ந்த பீட்டர்ஸ் ஜுட் லால் இனால் வழங்கப்பட்ட, நீர்கொழும்பு பகிரங்க நொத்தாரிசு ஜெஹான் குரூஸ் புள்ளேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.03ம் திகதிய அட்டோர்ணி தத்துவ இல. 1337ஐ இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். என் சார்பாக சொல்லப்பட்ட பீட்டர்ஸ் ஜுட் லால் இனால் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

---

## மாநகரசபை - குருணாகல்

# பெறுகைக்கான அறிவித்தல்

### மாளிகாபிட்டிய கேட்போர் கூடத்தின் மாடிப்படிகளின் கீழ் காணப்படும் விற்பனை பிரிவினை குத்தகைக்கு வழங்குவதற்கான திறந்த தேசிய போட்டி முறையிலான விலைகோரல்

குருணாகல் மாநகர சபைக்கு சொந்தமான மாளிகாபிட்டிய கேட்போர் கூடத்தின் மாடிப்படிகளின் கீழ் காணப்படும் விற்பனை பிரிவுகள் 49 வருடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான திறந்த தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பிரிவு இல. | ஒரு பிரிவில் சதுர அடி அளவு (சதுர அடி) | ஒரே நேரத்தில் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச மனுத்தொகை வரி நீங்கலாக (ரு.) | ஆவணக் கட்டணம் (+ பெ.சே.வரி 12%) ரு. | மனு உத்தரவாத வைப்பு / மனுப் பாதுகாப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | A-01 | 411.09 | 2,704,425.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 27,044.00 |
| 2 | A-02 | 380.34 | 2,541,525.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 25,415.00 |
| 3 | A-03 | 365.64 | 2,466,700.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 24,667.00 |
| 4 | A-04 | 343.88 | 2,220,500.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 22,205.00 |
| 5 | A-05 | 307.75 | 1,999,925.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 19,999.00 |

மேற்குறிப்பிடப்பட்ட விற்பனை பிரிவுகளை குத்தகைக்கு வழங்குவதற்காக தேசிய போட்டிமுறையிலான மனுக்கோரலுக்கு குருணாகல் மாநகரசபையின் நகராட்சி மன்றத்தின் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள மனு ஆவணங்களை **2022.08.23 ஆம் திகதி முதல் 2022.09.13 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை அலுவலக நேரங்களில் குருணாகல் மாநகரசபையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். **2022.09.14 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **நகராட்சி மன்றக் குழுவின் கூட்டம் நடைபெறும் அரங்கில்** மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம். மனு ஆவணங்களுடன் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
தொலைபேசி : 037-4941869
மின்னஞ்சல் : ginumviyadam@gmail.com
தொலைநகல் : 037 2228136

**நகராட்சி ஆணையாளர்**
மாநகர சபை,
குருநாகல்.
2022/08/23

---

## மாநகரசபை - குருணாகல்

# பெறுகைக்கான அறிவித்தல்

### டொக்டர் சில்வா மாவத்தையில் அமைந்துள்ள விற்பனை கூடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான திறந்த தேசிய போட்டி முறையிலான விலைகோரல்

குருணாகல் மாநகர சபைக்கு சொந்தமான **டொக்டர் சில்வா மாவத்தையில் அமைந்துள்ள விற்பனை கூடத்தினை 10 வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான** திறந்த தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக கோரப்படுகின்றன.

| தொடர் இல. | கடை இல. | ஒரு கடையின் சதுர அடி அளவு (சதுர அடி) | ஒரே தடவையில் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச மனுத்தொகை வரி நீங்கலாக (ரு.) | ஆவணக் கட்டணம் (+பெ.சே.வரி 12%) ரு. | மனு உத்தரவாத வைப்பு / மனுப் பாதுகாப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 01-A | 58.51 | 1,254,000.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 12,540.00 |
| 2 | 02-A | 46.86 | 1,004,000.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 10,040.00 |
| 3 | 03-A | 40.68 | 872,000.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 8,720.00 |
| 4 | 04-A | 33.29 | 713,000.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 7,130.00 |
| 5 | 05-A | 24.15 | 517,000.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 5,170.00 |
| 6 | 06-A | 31.52 | 675,000.00 (ஆரம்பக் கட்டணம்) | 3,240.00 | 6,750.00 |

மேற்குறிப்பிடப்பட்ட விற்பனை பிரிவுகளை குத்தகைக்கு வழங்குவதற்காக தேசிய போட்டிமுறையிலான மனுக்கோரலுக்கு குருணாகல் மாநகரசபையின் நகராட்சி மன்றத்தின் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள மனு ஆவணங்களை **2022.08.23 ஆம் திகதி முதல் 2022.09.13 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை அலுவலக நேரங்களில் குருணாகல் மாநகரசபையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். **2022.09.14 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **நகராட்சி மன்றக் குழுவின் கூட்டம் நடைபெறும் அரங்கில்** மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம். மனு ஆவணங்களுடன் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
தொலைபேசி : 037-4941869
மின்னஞ்சல் : ginumviyadam@gmail.com
தொலைநகல் : 037 2228136

**நகராட்சி ஆணையாளர்**
மாநகர சபை,
குருநாகல்.
2022/08/23

---

# பெறுகை அறிவித்தல்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம்

### Supply of Double Layer Form Mattresses 183x91x10 CM (6'0""x3'0"x4") எண்ணிக்கை 3700

**பெறுகை இலக்கம் 3/1/2/SA/21/RB/16RE**

1. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவரினால் செ.மீ 183x91x10 CM (6’0””x3’0”x4”) இரண்டு படலம் கொண்ட 3700 மெத்தைகளை வழங்குவதற்காகத் தகைமையுள்ள மற்றும் முன்னணி வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்கல் காலம், கட்டளைகள் வழங்கப்பட்ட தினத்திலிருந்து 10 வாரங்களாகும்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படும்
3. அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட (Black Listed) வழங்குநர்களிற்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
4. விபரக்குறிப்புக்கள், வழங்கல் காலம், மற்றும் திட்டமிடல் மற்றும் ஏனைய விபரங்கள் கேள்விப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை, பணிப்பாளர் (பொறியியல் துறை வழங்கல்)/ இயந்திரவியல் பொறியியலாளர் (வழங்கல்), அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் இடம் தொ.பே.இல. (011) 2534579/ (011) 2572351/2 நீடிப்பு 149/150 தொலைநகல் (011) 2532278 ) மூலம் பெற்றுக் கொள்ளலாம், அல்லது வார வேலை நாட்களில், 2022.08.22 முதல் 2022.09.12 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 04.00 வரை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தில் நேரில் சமுகமளித்து கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
6. 2022.08.22 முதல் 2022.09.12 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 15.00 வரை பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 1000/- இற்கான தொகையை காசாளருக்குக் காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.
7. முத்திரையிடப்பட்ட இரண்டு பிரதிகளினாலான கேள்விகள், 2022.09.13 அன்று மு.ப. 11.00 இற்கு முன்னர், தலைவர், பெறுகைக் குழு, மூன்றாம் மாடி, அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவ வீதி கொலன்னாவ இற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக, சமுகமளித்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனுக்களுடன், இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் உரிய படிவங்களிற்கு அமைவாக, பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கான விலைமனுப் பிணையம்/ வங்கிப் பிணையம் அல்லது அத்தொகைக்குச் சமமான தொகையை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் காசாளருக்கு பி.ப. 3.00 இற்கு முன்னர் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்விலைமனுப் பிணையம்/ வங்கிப்பிணையம் செல்லுபடியாக வேண்டிய ஆகக்குறைந்த காலம் விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
9. விலைமனு தொகையானது, ரூபா 5,000,000.00 இற்கு மேற்படுகையில், வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்ளூர் முகவர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ள படிவம் விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. 2022.08.30 அன்று மு.ப. 11.00 இற்கு அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் மூன்றாம் மாடியின் பணிப்பாளர் நாயகத்தின் பணிமனையில் இதற்கான முன்னோடி விளக்கம் மேற்கொள்ளப்படும்.

| இலக்கம் | பெறுகை இலக்கம் | வேலை விபரம் | விலைமனுப் பிணைத் தொகை ரூபா | விலைமனுக் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 01 | 3/1/2/SA/21/RB/16RE | செ.மீ 183x91x10 CM (6’0””x3’0”x4”) இரண்டு படலம் கொண்ட 3700 மெத்தைகளை வழங்கல் Supply of Double Layer Form Mattresses 183x91x10 CM (6’0””x3’0”x4”)-3700 Nos. | 370,000.00 | 13.09.2022 11.00 மணி |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**பணிப்பாளர் நாயகம் பணிமனை.**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்.**
**கொலன்னாவ.**
**2022.08.16**

# கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகாவித்தியாலய பழைய கட்டடத்தை அகற்றுமாறு வேண்டுகோள்



அனுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகாவித்தியாலயத்தின் 65 வருட கால பழைமை வாய்ந்த கட்டத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை அனுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதியில் அமைந்துள்து. சுமார் 100 வருட கால வரலாற்றைக் கொண்ட பாடசாலையாக கருதப்படும் இப்பாடசாலையில் பாடசாலையை சூழவுள்ள அழுத்கம, அசறிக்கம, கட்டுகலியாவ, கியுளேகட, இஹலகொட்டியாவ மற்றும் கோவில்பந்தாவ உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த தரம் 6 தொடக்கம் 12 வரை மாணவர்கள் கல்வி பயின்று வருவதுடன் இப்பிரதேசத்திற்கு இப்பாடசாலையானது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

இங்கு கல்வி கற்றவர்கள் பல்வேறு துறைகளிலும் செயல்பட்டு வருகின்றனர். இவ்வாறான பின்னணியை கொண்ட பாடசாலையில் தற்போது 540 மாணவர்கள் கல்வி பயின்று வருவதுடன் அதிபர் உட்பட 28 ஆசிரியர்களும் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்தகால க. பொ. த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் வரவேற்கத்தக்க பெறுபேறுகளை கொண்டுள்ளன. க.பொ.த உயர்தரப் பரீட்சைகளின் போது வருடாந்தம் மாணவர்கள் பல்கலைக்கழக வாய்ப்பை பெற்று வருகின்றனர். அதிபரின் சிறந்த ஆளுமையின் காரணமாக ஆசிரியர் குழாம் கற்பித்தல் நடவடிக்கையில் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான நிலையில் 100 × 20 அளவிலான வகுப்பறையைக் கொண்ட குறித்த கட்டடம் 65 வருடம் பழைமை வாய்ந்ததாகும். அதில் நான்கு வகுப்பறைகளும் பணியாளர்கள் அலுவலகமும் அமைந்துள்ளன. அதில் சுமார் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இருந்த போதும் கட்டடத்தின் கூரை, அதன் தளம் மற்றும் சுவர் என்பன மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன. கூரை எவ்வேளையிலேனும் உடைந்து உயிராபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது.

கல்வித் திணைக்கள கட்டட பொறியியலாளர் பிரிவு மாகாண கல்வி அத்தியட்சகர் இல 03 பொது 2017 மற்றும் 2027.08.05. கடிதத்தின் பிரகாரம் குறித்த கட்டடத்தை அகற்றுமாறு கோரி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதும் இது வரைக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை என மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள், கல்வி சார் சமூகத்தினர் விசனம் தெரிவிக்கின்றனர்.

மதார் தம்பி ஆரிப் ...
(அனுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# நாட்டை மீட்டெடுப்பதாயின் கட்சி பேதங்களை மறந்து ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்!





எமது நாடு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான பொருளாதார நிலைக்குத் தீர்வு காண்பதற்காக இன்று பாராளுமன்றத்திலுள்ள இருநூற்று இருபத்தைந்து உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேசம் முகம்கொடுக்கும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாயின், நாட்டின் இந்த நிலைக்குக் காரணமான முன்னாள் ஆட்சியாளர்களும் ஜனாதிபதிக்கு ஆதரவு நல்க வேண்டும் என கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்க தெரிவித்தார்.



## நெருக்கடிக்குள் அவதியுறும் மக்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வில் கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்க

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக கஷ்டநிலைக்குள் தள்ளப்பட்டுள்ள கொழும்பு மாநகராட்சி பிரிவின் மக்களுக்கு மூவாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான சதொச வவுச்சர்களைக் கையளிக்கும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேயர் ரோஸி சேனநாயக்க தொடர்ந்தும் உரையாற்றுகையில்,"எமது நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ள நிலையில் அனைவரும் தேசத்துக்காக அர்ப்பணிப்புகள் செய்தல் வேண்டும். நாம் எவ்விதத்திலும் குறுகிய அரசியல் நோக்கில் செயல்படக் கூடாது.

எமது அரசியல் கருத்துகள்,கட்சி பாதுகாத்தல், சுய அரசியல், எதிர்காலத்தை எதிர்பார்த்து செயல்படல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை மனதில் கொண்டு மக்களை மேலும் மோசமான நிலைக்கு ஆளாக்கும் அரசியல்வாதிகளாக நாம் இருப்பதில் பயனில்லை.

எமது தேசம் பொருளாதாரத்தில் அதல பாதாளத்தை நோக்கிப் பயணிப்பதை சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது. நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஆட்சியமைத்து நெருக்கடிகளுக்கு தீர்வுகாண செயல்படல் வேண்டும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களையும் தேசத்தையும் மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு நாம் அரசியல்,இன,மத,குல பேதங்களை மறந்து ஒன்றுபட்டு பொருளாதார மீட்சிப் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இன்று மக்களின் உள்ளங்களில் காணப்படும் பொருளாதார வேதனைகளை மூன்று பிள்ளைகளின் தாயாக நான் நன்கு உணர்கின்றேன். பிள்ளைகளுக்கு மூன்று நேர உணவு வழங்க முடியாது அவர்கள் வேதனைப்படுகின்றனர். பெற்றோர் இந்த நிவாரண உதவிக்காக நீண்ட வரிசையில் நிற்கின்றனர். நாட்டின் இந்த துரதிருஷ்ட நிலைக்கு அரசியல்வாதிகள் பொறுப்புக் கூறல் வேண்டும். எமது அரசியல்வாதிகள் அனைவரும் இவ்வாறு பொறுப்புக் கூறலுடன் நின்றுவிடாது நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக அனைத்து பேதங்களையும் ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு மக்களுக்காக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் ஒன்றிணைந்து செயல்பட முன்வரல் வேண்டும்.

பாராளுமன்றின் 225 உறுப்பினர்களும் தேசத்தையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க இதய சுத்தியுடன் செயல்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்" என வலியுறுத்தினார்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர் ...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# சமுத்திரங்களில் செல்வாக்கை நிலைநாட்ட துடிக்கும் நாடுகள்!

கப்பல் போக்குவரத்துக்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்து, பிராந்திய ஏகாதிபத்தியத்தை வளர்த்துக் கொள்ளும் வியூகங்கள் உலக அரசியலில் விஸ்வரூபமெடுக்கின்றன. பாரசீகக் கடல்பரப்பை கட்டுப்படுத்த ஈரான் முனைகிறது, இந்து சமுத்திர கடல் வழியை கட்டுப்படுத்த சீனா விரும்புகிறது, தாய்வான் கடற்பிராந்தியத்தை வளைத்தெடுக்க அமெரிக்கா நாடுகிறது.



எல்லாம் ஆளும் ஆசையால் வரும் ஆபத்துக்கள்தான். தனக்குத் தேவையானதை கொண்டு செல்ல, எடுத்துவர கடல்வழிதான் கைகொடுக்கிறது. இந்த சர்வதேச கடலாளுகைக்குள் இலங்கையை கொண்டுவரும் பிரயத்தனங்களே இப்போது பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

சீனாவின் யுவான்யாங் 05 கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் வரவிருந்த திகதி தாமதமாகுமளவுக்கு இராஜதந்திர நெருக்கடிகள் உச்சத்தை தொட்டன. இறுதியில் இம்மாதம் 17 முதல் 22 வரை தரித்து நிற்பதற்கு இலங்கை வந்தது இக்கப்பல்.

இது வருவதற்கு ஒரு தினத்துக்கு முன்னர் கடல்காணிப்பு விமானத்தை இந்தியா வழங்கி ஆறுதலடைந்தது. இந்த கண்காணிப்பு (ட்ரொய்னர்) விமானம் வழங்கப்படும் வரைக்கும் தான் சீனக்கப்பலின் வருகை தாமதப்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் ஊகங்கள் நிலவுகின்றன.

கடந்த காலத்தில் ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் செய்யாத அபிவிருத்திகள் மற்றும் தென்னிலங்கை எழுச்சிகள் என்பன ராஜபக்ஷ ஆட்சிக்கால நிர்வாகத்தில்தான் ஏற்பட்டன. பாரியளவில் கடன் பெறப்பட்டும், நாட்டின் சொத்துக்கள் சில குத்தகைக்கு விடப்பட்டும்தான் இந்தச் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. இந்தக் கடன்படுகைகளை மீளச் செலுத்த முடியாதுள்ள இலங்கை, சீனாவின் சில கட்டளைகளுக்கு கட்டுப்படாமல் இருக்க முடியாது.

மறுபுறம் இந்தியாவுடனும் ஒரு நிலைப்பாட்டில் நெருங்க வேண்டியும் நிர்ப்பந்தம் இருக்கிறது. அரசியல் ரீதியான இந்தியாவின் அழுத்தங்களைச் சமாளிக்காது சுயமாக இயங்கும் நிலையில் நாமில்லை! இதனால்தான் இந்த நிர்ப்பந்தம். இருதலைக்கொள்ளி எறும்பாக எத்தனை நாட்களுக்கு தவிப்பது? ஒரு நிலைப்பாட்டுக்கே வர வேண்டும் என்கின்றனர் சிலர்.

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகரின் பாரிய முகத்தோற்றம் இந்தியாவை எச்சரித்துக் கொண்டே இருக்கிறது. வெறும் பொருளாதார அபிவிருத்தி மையமாக இது வர்ணிக்கப்பட்டாலும், இந்தியா இதை நம்பத் தயாராக இல்லை. இந்த அச்சம்தான் இந்தியாவின் இலங்கை மீதான சந்தேகத்துக்கு அடித்தளமானது. எனவே, இவ்விரு நாடுகளதும் போட்டி வியூகங்களுக்குள் சிக்கிக் கொள்ளும் நிலையே நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் உற்பத்தியும் அந்நிய செலாவணி வருமானமும் சுகதேகிகளாக நம்மை வாழவைக்கும் வரை இதுதான் நிலைப்பாடாகப் போகின்றது.

எங்கோ இருந்து கொண்டு இன்னொரு நாட்டில் நடப்பதை நவீன கருவிகளால் கண்காணிக்கும் நிலைமை இருக்கையில் எந்தவொரு நாடும் தனது பாதுகாப்பில் கரிசனையின்றி இருக்க முடியாது. இந்தியாவின் இந்த நியாயங்கள் இலங்கைக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதையே 'பொறிக்குள் அகப்படும் அரசியல்' என்கிறோம்.

கடல் வளங்களைச் சுரண்டல், அயல் நாடுகளை கண்காணித்தல், ஆட்கடத்தல், உளவுப் பரிமாற்றம் மற்றும் ஒலி அலைகளை ஒற்றுக் கேட்டல் போன்ற நோக்கங்கள் சீனாவின் தற்போதைய தேவையென ஐரோப்பா மற்றும் அமெரிக்கா கருதுகின்றன.

அணு உலைகளில் செயற்படும் கடல்மூழ்கிக் கப்பலைக் கண்காணிக்கவே, சீனாவின் இந்தக் கப்பல் வந்துள்ளதாகவும் ஒரு தரப்பினர் கூறுகின்றனர். அவுஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் அண்மையில் செய்து கொண்ட கடல் பாதுகாப்பு ஒப்பந்தம் சீனாவின் கடலாளுகைக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதப்படுவதுதான் இந்தப் பிராந்தியப் பதற்றத்துக்கான காரணமாகும்.

சுஹைப் எம்.காசிம் ...

# தமிழகத்தில் 'அருந்தமிழ்க் கவிஞர் கவிமுகில் 50' விழா



சக்தி கார்ஸ் உரிமையாளர் சக்திவேல் தஞ்சை அருகே உள்ள ஆர்சுத்திப்பட்டு என்னும் கிராமத்தில் பிறந்தவர். சக்திவேல் என்னும் இயற்பெயராலும், இலக்கிய உலகில் கவிமுகில் என்னும் பெயராலும் அறியப்படுகிறார். 16.06.1968 அன்று பாவாடை ஆர்ச்சுத்தியார்_ ஷரூபாவதி அம்மாள் இணையருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். 50 பைசா வருமானத்தில் தொடங்கி, இன்று 25000 சதுர அடி பயன்படுத்தப்பட்ட கார்கள் விற்பனை அங்காடிக்கு உரிமையாளர்.



தனக்குள் இருக்கும் தமிழ் ஆர்வத்தினால் கவிமுகில் என்னும் புனைபெயரில் 30க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அறக்கட்டளைகளைத் தொடங்கி விருதுகளும், சமுதாய உதவியும் செய்து வருகிறார்.

இவரின் 50ஆவது அகவையை முன்னிட்டு அண்மையில் 'அருந்தமிழ்க் கவிஞர் 50' எனும் விழா நிகழ்த்தப்பட்டது. அந்த விழாவில் ஏழு நூல்களும், அவரைப் பற்றிய ஆவணப்படமும் வெளியிடப்பட்டன. சிறந்த ஆளுமைகளுக்கு, படைப்புகளுக்கு விருதுகள் வழங்கல், நூல்களுக்குப் பரிசுகள், மகாகவி ஈரோடு தமிழன்பன் விருது என மகிழ்ச்சிக் கொண்டாட்டமாக நடந்தது. அதில் இயக்குநர் மாமன்னன் செல்வராஜ் இயக்கிய 'வெற்றி நாயகன் கவிமுகில் 50' என்ற ஆவணப்படத்தைத் திரைக்கதைப் பிதாமகன் கே. பாக்யராஜ் வெளியிட்டு ஆவணப்படத்தைப் பற்றிச் சிறப்புரையாற்றினார்.



மேலும் சு. சங்கரவடிவேலு ஐ.ஆர்.எஸ் முன்னிலை வகிக்க, சாகித்திய அகாதெமி முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முனைவர் இராம. குருநாதன் வரவேற்புரை வழங்கினார். மகாகவி ஈரோடு தமிழன்பன் தலைமையுரை வழங்கினார். கவிஞர்கள் இளைய கம்பன் மற்றும் ச. சு. கலையரசன் சக்திவேல் இருவரும் கவிபாடினர். கவிஞர் தங்கம் மூர்த்தி, ரயில்வே கூடுதல் காவல்துறை இயக்குநர் திருமதி வனிதா ஐ.பி.எஸ், சிறுபான்மை நலத்துறை இயக்குநர் டொக்டர் சி. சுரேஷ்குமார் ஐ.ஏ.எஸ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் நா. அருள் ஐ.ஏ.எஸ் ஆகியோர் கலந்துகொண்டு வா ழ்த்துரை வழங்கினர். பேரா. இரா. மஞ்சுளா, கவிஞர் சி. புனித ஜோதி ஆகியோர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, 'விழிகள்' நடராஜன் நன்றியுரை வழங்கினார்.

1.படைப்புப் பாதையில் ஒரு பயணம் 2. கவிமுகிலின் கவிதை வானம் (அணிந்துரைகள்) 3. பேரா. ஆதிரா முல்லை எழுதிய காலச்சிற்பி 4. ஏ. எஸ் இளங்கோவன் எழுதிய கவிமுகிலின் மவுனம் கலைத்த வினாக்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) 5. பேரா. ஆர். விஜயலட்சுமி எழுதிய கவிமுகிலின் சூரியத் துளிகள், சின்ன உளிகள், மௌனம் கலைத்த வினாக்கள் (இந்தி மொழிபெயர்ப்பு) 6. பேரா சி சங்கரநாராயணன் எழுதிய மௌனம் கலைத்த வினாக்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) 7. வேடியப்பன் எழுதிய கல்பொரு சிறுநுரை கவிமுகிலின் தேர்ந்தெடுத்த கவிதைகள் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

முனைவர் வ. ஜெயதேவனுக்கு வாழ்நாள் சாதனைக்காக மகாகவி ஈரோடு தமிழன்பன் விருது வழங்கப்பட்டது. எழுத்தாளர் உத்தமசோழன், முகிலை ராஜபாண்டியன், கவிஞர் இளைய கம்பன், கவிஞர் ஆஷரூர் தமிழ்நாடன் போன்றோரின் நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், இலக்கிய உலகில் சாதனை படைத்த எண்ணற்றோருக்கும், தொழில்துறையில் சிறந்து விளங்கும் தொழில்முனைவோருக்கும் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. பல முக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எச்.எச்.விக்ரமசிங்க ...

# வறிய மக்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு உதவி வழங்கும் 'சௌபாக்கிய இல்லம் - 2022' திட்டம்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'சௌபாக்கிய இல்லம் 2022' திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த பயனாளிகள் ஒன்பது பேருக்கான வீடுகள் நிர்மாணிக்கவும், வீடுகளை திருத்தம் செய்வதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஏ.கே.றொஷின்தாஜ் தலைமையில் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு 02 மற்றும் ஆலிம் நகர் கிராமப் பிரிவுகளில் இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது வீடுகளில் முழுஅளவில் 3 வீடுகளுக்கு தலா 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பகுதியளவில் 3 வீடுகளுக்கு 2 இலட்சத்து 25ஆயிரம் ரூபாவும் திருத்தத்திற்காக 3 வீடுகளுக்கு 1இலட்சத்து 25ஆயிரம் ரூபாவும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'சௌபாக்கிய இல்லம் 2022' திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்சேய்க் ரீ.எம். அன்சார், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்சேய்க் எம்.ஜே.எம். நிஹ்மத்தல்லா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், சமுர்த்தி மேற்கு வங்கி முகாமையாளர் யூ.கே.எம்.நழிம், சமுர்த்தி அபிவிருத்தி உதவியாளர் எம்.ஐ.சபாயுதீன், கருத்திட்ட உதவியாளர் எம்.ஐ.முஹாஜிர், பள்ளிக்குடியிருப்பு 02ம் பிரிவின் சமுர்த்தி உத்தியோகத்தர் கே.நஜிமுதீன் ஆகியோர் கலந்து கொண்டு வீட்டுக்கான அடிக்கல் நட்டு வைத்தனர்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் சிரமமுறும் வருமானம் குறைந்த மக்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'சௌபாக்கிய இல்லம் 2022' திட்டத்தின் கீழ் வீடுகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு செய்யப்பட்டு வருவதையிட்டு வறிய மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

முகம்மட் றியாஸ் ...
(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# இந்திய அரசியல் தலைவர் ஒருவரை கொலை செய்வதற்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் திட்டம்!

இந்திய மத்திய அரசின் உச்ச தலைவர் ஒருவரைக் குறி வைத்து ஐ.எஸ் பயங்கரவாதிகள் நடத்தத் திட்டமிட்டிருந்த தற்கொலைப் படை தாக்குதல் குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளது. இந்திய எல்லையில் பயங்கரவாதிகளின் தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதேபோல வெளிநாடுகளில் இருந்த ஊடுருவல் முயற்சியும் நடந்து வருகிறது.

இதனை எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள படையினர் தீவிரமாகக் கண்காணித்து முறியடித்து வருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து கொண்டு இந்திய மண்ணில் தாக்குதல் நடத்துவது தொடர்பாக பயங்கரவாதிகள் திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அதேபோன்ற ஒரு சம்பவம்தான் இப்போது ரஷ்யாவில் நடந்துள்ளது. இந்தியாவின் அரசில் முக்கிய இடத்தில் உள்ள அரசியல் தலைவரைக் குறித்து வைத்து தற்கொலைப்படை தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதியைக் கைது செய்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

"ரஷ்யாவில் தடை செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதியை ரஷ்யாவின் பாதுகாப்புத் துறை அடையாளம் கண்டு கைது செய்துள்ளது. அவர் மத்திய ஆசியப் பிராந்தியத்தில் உள்ள ஒரு நாட்டைச் சேர்ந்தவர். அவர் இந்தியாவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கிய அரசியல் தலைவரைக் குறி வைத்து தற்கொலைப்படை தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருந்தார் என்பதும் விசாரணையில் தெரிய வந்தது. கைது செய்யப்பட்டவர் துருக்கியில் ஐ.எஸ்.ஐஎஸ் அமைப்பில் சேர்ந்துள்ளார்" என்று ரஷ்ய பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## அப்ரிடிக்கு பதிலாக முஹமது ஹஸ்னைன்



எதிர்வரும் ஆசியக் கிண்ண தொடரில் உபாதை காரணமாக வெளியேறிய பாகிஸ்தான் அணி வேகப்பந்து வீச்சாளர் ஷஹீன் ஷா அப்ரிடியின் இடத்திற்கு முஹமது ஹஸ்னைன் அழைக்கப்பட்டுள்ளார்.

அதிவேகத்தில் பந்து வீசக்கூடியவரான 22 வயது ஹஸ்னைன் இதுவரை 18 டி20 சர்வதேச போட்டிகளில் 17 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். தற்போது இங்கிலாந்து முதல்தர போட்டிகளில் ஆடிவரும் ஹஸ்னைன் அங்கிருந்து ஆசிய கிண்ணத் தொடரில் பாக். அணியுடன் இணையவுள்ளார்.

ஒகஸ்ட் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் ஆசியக் கிண்ணத் தொடரில் பாக். அணி அடுத்த நாளில் இந்தியாவுடன் தனது முதல் போட்டியில் ஆடவுள்ளது.

### ரணதுங்க 4 விக்கெட் வீழ்த்தியபோதும்:

# இங்கிலாந்து இளையோர் வேகமாக ஓட்டம் குவிப்பு

இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு எதிரான முதலாவது நான்கு நாள் இளையோர் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணி வேகமாக ஓட்டங்களை குவித்து வலுவான நிலையில் உள்ளது.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை இளையோர் அணி மற்றும் இங்கிலாந்து இளையோர் அணிக்கு இடையிலான முதலாவது இளையோர் டெஸ்ட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) செம்ஸ்போர்டில் ஆரம்பமானது.

இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இங்கிலாந்து இளையோர் அணியின் ஆரம்ப வரிசை வீரர்கள் சிறப்பாக செயற்பட்டனர். 3ஆவது விக்கெட்டுக்கு ரொஸ் வைட்பீல்ட் மற்றும் ஜோர்ஜ் பெல் இருவரும் 185 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.



இதில் ஜோர்ஜ் பெல் 96 பந்துகளில் 107 ஓட்டங்களையும் வைட்பீல்ட் 106 பந்துகளில் 86 ஓட்டங்களையும் பெற்றனர். இதன்மூலம் இங்கிலாந்து இளையோர் அணி 78.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 387 ஓட்டங்களை பெற்றது.

இதன்போதும் இலங்கை இளையோர் அணி சார்பில் வேகப் பந்து வீச்சாளர் துவிந்து ரணதுங்க 17 ஓவர்களில் 100 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை இளையோர் அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 8.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்களை பெற்றிருந்தது.

# அக்கரைப்பற்று கால்பந்து அணி மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி அம்பாறை மாவட்ட சம்பியனாக தெரிவாகி கிழக்கு மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இச்சுற்றுப்போட்டி அக்கரைப்பற்று பொதுவிளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அமீர் அலி தலைமையில் நடைபெற்றது. அம்பாறை மாவட்டத்திலுள்ள 08 பிரதேச செயலக அணிகள் கலந்து கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி, கல்முனை பிரதேச செயலக அணியை 2–1 என்ற கோல் கணக்கில் வென்றது.



களுத்துறை கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்கு கீழ் பிரிவின் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாணந்துறை அல்பஹ்றியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) இறுதிப் போட்டியில் சீனன்கோட்டை அல்ஹுமைசரா தேசிய பாடசாலையை தோற்கடித்து களுத்துறை வலய சாம்பியனாக தெரிவாகியுள்ளதுடன் மாகாண மட்ட போட்டிக்கும் தகுதி பெற்றுள்ளது. அல்பஹ்றியா அணியைப் படத்தில் காணலாம்.

(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 27-08-2022 இல. 22




# மட்டக்களப்பில் 'டெக்போல்' அறிமுகம்



கால்மேசைப்பந்து (டெக்போல்) விளையாட்டினை மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிமுகம் செய்யும் நிகழ்வும், கால்மேசைப்பந்து விளையாட்டின் நடுவர் பரீட்சையில் சித்தியடைந்த நடுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அஸ்பக் அகடமி ஏற்பாட்டில் ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளரும் அகடமியின் பணிப்பாளருமான ஏ.எல்.எம். இர்பானின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். நௌபர் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின்போது கால்மேசை அறிமுகம், கால்மேசைப்பந்து விளையாட்டு நடுவர்கள் சீருடை அறிமுகமும் இடம்பெற்றது.

# பிஃபா இடைநிறுத்தம்: இந்திய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கோரிக்கை

அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் மீதான சர்வதேச கால்பந்து சம்மேளத்தின் (பிஃபா) இடைநிறுத்தத்தை நீக்கி, 17 வயதுக்கு உட்பட்ட மகளிர் உலகக் கிண்ண கால்பந்து போட்டியை திட்டமிட்டபடி நடத்துவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கும்படி இந்திய மத்திய அரசை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் கோரியுள்ளது.



இது தொடர்பில் பிஃபாவுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக மத்திய அரசு சார்பில் தோன்றிய சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தின் முன் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது தரப்புகளில் இருந்து தேவையற்ற செல்வாக்கு செலுத்துவதாகக் கூறியே பிஃபா இந்த நடவடிக்கையை எடுத்தது.

## சர்வதேச செய்திகள்

# இம்ரான் கானுக்கு எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் குற்றச்சாட்டுப் பதிவு

## கைதாவதை தடுக்க ஆதரவாளர்கள் திரண்டனர்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது அந்நாட்டு பொலிஸார் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்துள்ளனர்.

பொலிஸ் மற்றும் நீதித் துறை தனது நெருங்கிய உதவியாளரை தடுத்துவைத்து சித்திரவதை செய்ததாக இம்ரான் கான் குற்றம் சாட்டியதை அடுத்து இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொலிஸ் மற்றும் நீதிபதியை அச்சுறுத்தியதாகவே இம்ரான் கான் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமரின் வீட்டுக்கு வெளியில் கூடியுள்ள ஆதரவாளர்கள், அவர் கைது செய்யப்படுவதற்கு எதிராக கோசங்களை எழுப்பிவரும் நிலையில் நாட்டில் பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரலில் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டது தொடக்கம், இம்ரான் கான் அரசு மற்றும் இராணுவத்தை விமர்சித்து வருகிறார்.

கடந்த சனிக்கிழமை ஆற்றிய உரை ஒன்றில் இம்ரான் கான் இஸ்லாமாபாத் பொலிஸ் பிரதானி மற்றும் பெண் நீதிபதி ஒருவரை கண்டித்தார். தமது கட்சி சகாவான ஷஹ்பாஸ் கில்லை தடுத்து வைத்து தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தியதாக கண்டித்தார்.



இது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வெளியான செய்தியை அடுத்தே இஸ்லாமாபாத்தில் இருக்கும் இம்ரான் கான் வீட்டுக்கு வெளியில் நூற்றுக்கணக்கான அவரது ஆதவாளர்கள் திரண்டனர். இம்ரான் கானை கைது செய்ய முயன்றால் தலைநகரை முடக்குவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர். சம்பவ இடத்தில் பொலிஸார் நிறுத்தப்பட்டபோதும் முன்னாள் பிரதமரை கைது செய்ய திட்டமில்லை என்றும் சட்ட ஒழுங்கை பாதுகாக்கவே நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அரசு மற்றும் இம்ரான் கானுக்கு இடையிலான முறுகல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையிலேயே இந்த விசாரணை அரம்பிக்கப்பட்டுள்ளது.

தான் பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் புதிய தேர்தலை நடத்துமாறு கோரியும், அரசு மற்றும் இராணுவத்தை விமர்சித்தும் இம்ரான் கான் ஆவேசமான உரைகளை நிகழ்த்தி வருகிறார்.

இம்ரான் கான் அரச நிறுவனங்களுக்கு எதிராக வெறுப்புப் பேச்சை மேற்கொள்வதாக குற்றம்சாட்டி, அவரது நேரடி உரைகளை ஒளிபரப்புவதற்கு தொலைக்காட்சி சேவைகளுக்கு பாகிஸ்தான் ஊடக ஒழுங்குமுறை அதிகாரசபை தடை விதித்துள்ளது.

# 2 ஆண்டுகளுக்குப் பின் பாடசாலை திரும்பிய பிலிப்பைன்ஸ் மாணவர்கள்

கொவிட் பெருந்தொற்றினால் உலகில் நீண்டகாலம் மூடப்பட்டிருந்த பிலிப்பைன்ஸ் பாடசாலைகள் நேற்று (22) திறக்கப்பட்டதை அடுத்து மில்லியன் கணக்கான மாணவர்கள் வகுப்பறைக்கு திரும்பியுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தொலைதூர கல்வி முறை செயற்படுத்தப்பட்ட நிலையில் நாட்டின் சுமார் பாதி அளவான பாடசாலைகளின் வகுப்பறைகள் திறக்கப்பட்டுள்ளன.



சுமார் 24,000 அரச பாடசாலைகள் அல்லது பாதிக்கும் குறைவான பாடசாலைகளில் ஐந்து நாட்கள் வகுப்பறைகளில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை தனிப்பட்ட அல்லது ஒன்லைன் வகுப்புகளை நடத்தும் என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் கிழக்கு ஆசியாவில் கொரோனா தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான பிலிப்பைன்ஸில் மூன்று மில்லியன் தொற்றுச் சம்பவங்கள் பதிவானதோடு சுமார் 50,000 பேர் உயிரிழந்தனர்.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.